# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam  එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 01 | 2014 ஜனவரி 01-14 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00  260




ஜெனீவா பிரச்சினை



07

நேர்காணல்

கல்முனை...



10

## மையவாடியில் மதுபானசாலை?



கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம் மைய வாடிக்குச் சொந்தமான காணியை கபளீகரம் செய்யும் சட்டவிரோத செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மேல்மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், மையவாடிக் காணியில் மதுபானசாலை கட்டினால் → 16

# உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணயம் முஸ்லிம் சமூகத்துக்கு வேட்டுவிழும்?




பஷீர் அலி

உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணய விவகாரத்தில் சமூக, அரசியல் தலைமைகள் போதிய கவனம் செலுத்தாதவிடத்து முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்கு வேட்டு விழுந்துவிடும் என சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, உள்ளூராட்சிமன்ற எல்லை மீள்நிர்ணய விவகாரம் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்த மேலும் மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இக்கால அவகாசத்தை சரியானமுறையில் பயன்படுத்தாவிடத்து முஸ்லிம் சமூகம் நீண்டகால வரலாற்றுத் தவறொன்றுக்கு முகங்கொடுக்க நேரிடலாம் எனவும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா இதுவிடயத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். சிவில் சமூகப் பிரதிநிதிகள், முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் → 16





கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடிக்குச் சொந்தமான காணியை கபளீகரம் செய்யும் சட்டவிரோத செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது.

## பணக்காரப் பட்டியலில் பத்துக்குள் முஸ்லிம் தலைவர்கள்

உலகின் பணக்கார ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பட்டியலை போர்பெஸ் இதழ் டிசம்பர் 27ம் திகதி வெளியிட்டுள்ளது. இதன்படி முதல் பத்துக்குள் தெரிவாகியுள்ளோரில் பெரும்பான்மையோர் முஸ்லிம் தலைவர்களாவர்.

முதல் இடத்தை 36 லட்சம் கோடி டொலர் சொத்துகளுக்குச் சொந்தமான தாய்லாந்து மன்னர் பூமிபோல் அதுல்யதேஜும், இரண்டாவது இடத்தை → 16

## கட்டைக் காற்சட்டைகளைப் பேசாது ஹபாயாக்களைப் பேசுபவர்கள் மனநோயாளிகளே

ஆறு அங்குல கட்டைக் காற்சட்டையும் மார்புக் கச்சையுமாக வீதி வலம்வரும் யுவதிகளின் ஆடை குறித்துப் பேசாது, அடக்கொடுக்கமான ஹபாயாக்களை கழையச் சொல்லும் இனவாதிகள் மனநோயாளர்களே. அதுபற்றி நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என எழுத்தாளர் மாத்தளை மலரன்பன் தெரிவித்தார். நாட்டின் ஒழுக்கம் பற்றி கவலை கொள்பவர்கள் பர்தாக்கள் பற்றிப் பேசாமல் கலாசாரத்துக்கு சீரழிவு ஏற்படுத்தும் அரைகுறை ஆடைகள் குறித்தே பேசவேண்டும். மகாகவி பாரதிகூட ஒரு கவிதையில் பர்தா பற்றி ஆழமாகக் கூறியுள்ளார். எனவே, இன்று நேற்று ஏற்பட்ட ஒரு கலாசாரமல்ல; இது நீண்டகால வரலாற்றைக் கொண்ட கண்ணியமான ஆடைக் கலாசாரமாகும். பொதுப் போக்குவரத்துகளில் கலாசார சீரழிவுகளுக்கு வித்திடும் → 16

## யுத்தக் கணக்கெடுப்பு நம்பிக்கையற்ற மூடுமந்திரம் இனவாதம் எனும் கொழுத்த பூனை பந்தாடுகிறது

எவ்வித உண்மைத் தன்மைகளுமில்லாத யுத்த பாதிப்புகள் தொடர்பிலான கணக்கெடுப்புகளுக்கு ஆதரவு தெரிவித்து மக்களை ஏமாற்ற நாம் விரும்பவில்லை. இக்கணக்கெடுப்பு ஒரு மூடுமந்திரம். இதன் பின்னணியை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். இல்லையேல் வேறு, வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என மு.கா. செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ரீ. ஹஸன் அலி தெரிவித்தார்.

தமிழர், முஸ்லிம்களை நோகடிப்பதானது மனித உரிமை மீறல்களாகவே கருதப்பட வேண்டும். கொழுத்த பூனை எலியுடன் விளையாடி எலியை துன்புறுத்துவதைப் போல் சில இனவாதிகள் சிறுபான்மை மக்களை சீண்டிப்பார்த்து இன்பம் காணும் நிலைமை தொடர்ந்தும் ஏற்பட்டுள்ளது. → 16

## திறைசேரிக்குத் திருப்பியனுப்பிய பரோபகாரிகள் கிழக்கு மாகாணசபையின் கீழ்த்தரமான நிதி நிருவாகம்

கடந்த 2012 இல் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கிழக்கு மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட 1257 கோடி ரூபாவில் 853 கோடி ரூபா மட்டுமே செலவிடப்பட்ட நிலையில், எஞ்சிய 404 கோடி ரூபா திறைசேரிக்கு திரும்பச் சென்றுள்ளது.

கிழக்கு மாகாணம் முழுக்க செய்யப்பட வேண்டிய மக்கள் சேவைகள் நிரம்பிக்கிடக்க, ஒதுக்கப்பட்ட நிதியை அவைகளுக்கு செலவு செய்யாமல் திருப்பியனுப்புவதென்பது எவ்வளவு மோசமான நிதி நிருவாகத்தை எடுத்துக்காட்டுகிறது என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். செயலூக்கமற்ற கிழக்கு முதலமைச்சரின் கீழான நிருவாகமே இதற்கு பொறுப்புக்கூறவேண்டும். மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை பூரணமாகப் பயன்படுத்தத் தெரியாத தலைமைகள் மக்களுக்கு வாய்த்த சாபக்கேடைச் சொல்லி புத்திஜீவிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

## இசைக்கச்சேரியில் பர்தாக்கள்



அண்மையில் சக்தி ஊடக வலயமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கடற்கரை களியாட்ட விளையாட்டு மற்றும் இரவுநேர இசைநிகழ்ச்சி நீர்கொழும்பு பிரதேசத்தில் இடம்பெற்றன. இந்த இரவுநேரக் களியாட்டத்தைக் கண்டுகளிக்க ஹபாயாக்களுடனும் → 16


நீங்களும் ஒரு Engineer ஆகலாம்...

City & Guilds World's top rated qualifications

Entry requirement: (A/L) two passes in any stream

INSIGHT

Advance Diploma in Quantity Surveying (QS)
Advance Diploma in Civil Engineering
Advance Diploma in Automobile Engineering

தங்குமிட வசதிகள் உண்டு

Insight School of Engineering @ Mawanella Campus



For details: Type 'engineering' & sms to 077 3171 722

Insight Institute of Management and Technology
18A, Palmyrah Avenue, Colombo - 03

Hotline: 077 4372334
Email: insight.soe@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூராட்சிமன்ற சட்டத்தை திருத்த முஸ்தீபு தோற்கடிக்கப்பட்டவர்களை காப்பாற்றும் முயற்சி

உள்ளூராட்சிமன்ற சட்டத்தில் திருத்தங்கள் மேற் கொள்ளப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டி லுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டாலும் அவைகளின் தலைவர்கள் பதவி விலகாமல் தொடர்ச்சியாக குறித்த பதவியில் இருக்கக்கூடிய வகையிலேயே சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ள மதவாச்சி, ராஜாங்கன, உடுதும்பர, ஹங்குராங்கெத்த, ஜாயெல, தொம்பே மற்றும் பென்தொட்ட ஆகிய பிரதேசசபைகள் உள்ளிட்ட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாகாணசபை முறைமை நாட்டை குழப்பி வைத்திருக்கிறது

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன



ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபை முறைமையானது நாட்டின் ஆளுகையில், அதிலும் குறிப்பாக கல்வித்துறையில், குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதென அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

கல்வியமைச்சின் மேற்பார்வையில் 400 பாடசாலைகள் மட்டுமே உள்ளன. ஆனால் 9000 பாடசாலைகள் மாகாணசபைகள் வசமுள்ளன. நாம் நெருக்கடி வலையில் அகப்பட்டுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

# அரசாங்கமே குடு கடத்துகிறது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



முன்பெல்லாம் இலங்கையில் கிராம் கணக்கிலும் கிலோ கணக்கிலுமே போதைப்பொருள் கடத்தப்பட்டது. அப்போதெல்லாம் போதைப்பொருள் கடத்தல் மிகப் பெரியதொரு குற்றச்செயலாக கருதி தண்டிக்கப்பட்டனர். இன்று தொன் கணக்கில் போதைப்பொருட்கள் பரிமாற்றப்படுகின்றன. ஆனால், அதனைக் கட்டுப்படுத்தி தண்டிக்க இலங்கையில் சட்டமோ, நீதியோ இல்லை.

அரசாங்கமே இன்று சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் போதைப்பொருட்கள் பரிமாற்றம் செய்வதிலும் கடத்துவதிலும் அரசாங்கமே நேரடி தொடர்பைக் கொண்டுள்ளது. என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தேவைக்கேற்ப சட்டத்தையும் நீதியையும் மாற்றி நாட்டில் குற்றச்செயல்களை செய்து வருகின்றனர். குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நபர்களே குற்றத்தைச் செய்தால் யார் நாட்டைத் திருத்துவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# அறிமுகமற்றவர்கள் தருகிறார்களா? வாங்காதீர்கள் வெளிநாடு செல்வோருக்கு எச்சரிக்கை

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களை போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்துகின்றமை தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளதால் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது, தெரியாதவர்களின் பொருட்களைக் கொண்டு செல்வதை தவிர்க்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

பொதிகளுக்குள் போதைப் பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களிடம் கொடுத்தனுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பயணிகள் இதுவிடயத்தில் கவனமாக இருக்கவேண்டும் எனவும் பணியகம் அறிவித்துள்ளது.

# ஆண் பணியாளர்களுக்கு வட்டியில்லா கடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

வெளிநாடு செல்கின்ற ஆண் பணியாளர்களுக்கு வட்டியில்லா கடனை பெற்றுக்கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய கூறினார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குடும்பத் தலைவர்களான ஆண்கள் வெளிநாடு செல்வதற்கு அவர்களே பணம் செலுத்த வேண்டியுள்ளமை சிரமமான காரியமாக உள்ளது. எனவே, இந்த பணத்தை வட்டியில்லா கடனாக பெற்றுக் கொடுப்பதற்கு பணியகம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றார்



ஹொரண பிரதேச சபையால், சரத் சந்திர ஜயகொடி சாகித்ய விழாவையொட்டி நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட சிறுகதை போட்டியில் கவிஞர் கே.எம்.எம். இக்பால் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 2005 இல் சர்வோதய அமைப்பு நாடளாவியரீதியில் நடத்திய சிறுவர் கதைப் போட்டியிலும் முதலிடம் பெற்றவர். 2010 இல் கிழக்கு மாகாணசபை, 'தாமரையின் ஆட்டம்' என்ற இவரது நூலை சிறந்த நூலாகத் தெரிவு செய்தது. ஆசிரிய ஆலோசகரான இவர், 2007 இல் கௌரவ கலாநிதி பட்டத்தையும் 2011 இல் கலாபூஷணம் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

# வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏறிவிடுமோ என்ற அச்சமே வாய்திறக்காமைக்குக் காரணம்

## சுனாமி வீட்டுத்திட்டம் தொடர்பில் அசாத் சாலி



சபீக் ஹுசைன்

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக சவூதி அரேபிய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட 500 வீடுகளின் இன்றைய கதி என்ன என்பதை அரசாங்கம் முற்றாக மறந்துவிட்டமை கவலைக்குரியதாகும். இந்த நாட்டில் தலைவிரித்தாடும் இனவாதத்தின் உச்சக் கட்டந்தான் இது. அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதிநிதிகளும் அந்த மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளும் தமது மக்களுக்கு இழைக்கப்பட்ட இவ் அநீதியை தட்டிக்கேற்கும் துணிவின்றி உள்ளனர். மக்களுக்காக குரல் கொடுத்தால் எங்கே தமது வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏறிவிடுமோ என்ற அச்சந்தான் இதற்குக் காரணம் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டதைப் போன்ற நிவாரணங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடையாக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் கூட குடியேற விடாமல் தடுப்பதை இனவாதம் என்று சொல்லாமல் வேறு எப்படி குறிப்பிடலாம். எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் சம்மதிக்காமல் எந்தப் பாதிப்புக்கும் ஆளாகாத ஒரு பிரிவு அந்த வீடுகள் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு நிற்பதில் என்ன நியாயம் உள்ளது?

இவ்விடயத்தில் காலம் தாழ்த்தாமல் முஸ்லிம் பிரதிநிதிகள் கவனஞ்செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அனர்த்தத்தை அறிவிக்க 117

திடீர் அனர்த்தங்களை அறிவிக்க 24 மணிநேர இலவச தொலைபேசி சேவையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

அனர்த்தங்கள் மற்றும் வீதி விபத்துகள் தொடர்பில் 117 என்ற இலக்கத்துக்கு 24 மணிநேரமும் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கலாம்.

# ஹெம்மாதகம மடுள்போவயில் வெற்றியளித்த கூட்டு ஸகாதும் விநியோகமும்

ஹெம்மாதகம மடுள்போவ ஜாமிஉல் ஹஸனாத் ஜும்மு ஆ மஸ்ஜித் நிருவாகத்தின் கீழ் இயங்கும் பைதுல் ஸகாத் நிதியம் 2013 ஆம் ஆண்டுக்கான கூட்டு ஸகாதை வெற்றிகரமாக சேகரித்து விநியோகித்துள்ளதாக நிதியத்தின் தலைவர் எம்.ரீ.எம். ரஸீன் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக ஏழாவது வருடமாக இடம்பெறும் கூட்டு ஸகாத் சேகரிப்பில் இவ்வருடம் சுமார் ஏழு இலட்சம் ரூபா வசூலிக்கப்பட்டு ஊரிலுள்ள ஸகாத் பெற தகுதியானவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மள்வானை உலஹிட்டிவல சமூக அபிவிருத்தி சங்கத்தின் (UCDS) ஏற்பாட்டில் அப்பிரதேசத்தை சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு உலஹிட்டிவலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் மற்றும் [illegible] இனத்தை சேர்ந்த 90 மாணவர்களுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டன. பிரதம அதிதியாக கலந்துகொண்ட உலஹிட்டிவல அல்மஹ்மூத் வித்தியாலய அதிபர் [illegible] உட்பட சங்க உறுப்பினர்களையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு வருவாரா ஷிராணி பண்டாரநாயக்க?



முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் அவருக்கு எதிரான நீதிமன்ற வழக்கு மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்தும் ஓரளவு நிவாரணம் பெறலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஷிராணி பண்டாரநாயக்கவை அரசியலுக்குள் இழுத்துவந்து ஐ.தே.க. சார்பில் களமிறக்கும் பணியில் எம்.பி. எரான் விக்ரமரத்ன முயற்சிக்கிறார்.

ஷிராணி இவ்விடயம் தொடர்பில் சாதகமான பதிலை வெளியிட்டுள்ளபோதும் அவரது கணவர் உட்பட குடும்பத்தினரின் கடும் எதிர்ப்பு காரணமாக இறுதித் தீர்மானம் எடுப்பதை அவர் பிற்போட்டுள்ளார்.

இறுதி நேரத்திலாவது இணக்கத்திற்கு செல்லமுடியும், தேர்தலில் போட்டியிடுவதால் அரசாங்கத்தின் பழிவாங்கலுக்கு மேலும் உள்ளாக்கப்படலாம் என ஷிராணியின் கணவர் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்களுக்குள் பிளவுபட்டால் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும்

## தென்மாகாண கல்வியமைச்சர்



கலைமகன் பைரூஸ்

உங்கள் பிள்ளைகள் மீது நீங்கள் அன்பு செலுத்துபவர்களாக இருந்தால், உங்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். முஸ்லிம்கள் ஒற்றுமைக்கு ஆதர்சமாக இருப்பவர்கள். நீங்கள் முரண்பட்டால் உங்களைப் பிரிப்பது மிகவும் இலகுவாக இருக்கும். எதிரான சக்திகள் உங்களுக்கு எதிராக இலகுவாக செயற்படும். பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும். அதனால் உங்கள் சிறார்களின் உள்ளங்கள் புண்பட்டு அது கல்விவீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட

➡ 16

# கடன்பட்டு கொங்கிறீட் வீதிபோட்டு மக்களை உறங்கச் சொல்லும் அரசாங்கம்

## ரணில் விக்ரமசிங்க



இந்த அரசாங்கத்தினால் கடந்த 55 வருடங்களில் இல்லாதளவு கடன் சென்ற 4 வருடங்களில் பெறப்பட்டுள்ளது. கடன்பட்டு கொங்கிறீட் வீதிகள் போட்டு மக்களை வீதியில் நித்திரை கொள்ளுமாறு அரசாங்கம் சொல்கிறது. வீதிகள் போடுகிறோம் என்ற பெயரில் யார் வயிறு வளர்க்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

➡ 18

# காணி சுவீகரிக்க இராணுவத்தை அனுப்பாதீர் கோதாபயவை எதிர்க்கிறார் அமைச்சர் வாசுதேவ



கொழும்பு நகரின் அபிவிருத்திக்காக கொழும்பு நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள காணிகளை சுவீகரிக்கப்படும்போது இது குறித்து அக்காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு அறிவிப்பதற்காக சீருடை அணிந்த படை அதிகாரிகளை அனுப்பி வைப்பது தவறான நடைமுறையாகும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோதாபயவின் கீழியங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மக்களை தெளிவுப்படுத்த இராணுவ சீருடை அணிந்தவர்களை அனுப்பிவைப்பதினால் மக்கள் பீதியடைகின்றனர். இராணுவ சீருடையில் இராணுவ நடவடிக்கையைப் போன்று சென்று இந்த செயற்பாடுகளில் ஈடுபடுவது சுதந்திரத்திற்கும் உரிமைக்கும் முரணானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக தான் அனுப்பிய கடிதமொன்றுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை அர்த்தமற்ற பதிலொன்றை வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# புருணை பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



2014, 2015 கல்வியாண்டுக்காக புருணை பல்கலைக்கழகங்களில் பல்வேறு கற்கைநெறிகளுக்காக அந்நாட்டு அரசினால் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்புலமைப் பரிசில்களுக்காக பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்கைநெறிகளை பயிலும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இப்புலமைப் பரிசில்களை பெறத் தகுதியானவர்களுக்கு பாடநெறிக் கட்டணம், தங்குமிடம், விமானக் கட்டணம் என்பனவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இவை பற்றிய போதிய தெளிவின்மையால் எமது சமூகத்திலிருந்து ஒருசிலரே இவற்றுக்கு விண்ணப்பிக்கின்றனர். அதிலும் முறையாக விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யாததன் காரணமாக அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

இவ்வாண்டும் புருணை தாருஸ்ஸலாம் அரசினால் பல்வேறு பட்ட Diploma, Degree, Masters, PhD கற்கைநெறிகளுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவற்றில், 18-25 வயதானவர்களுக்கு Diploma, Degree பாடநெறிகளுக்கும் 35 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு Masters, PhD பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

இது பற்றிய மேலதிக விபரங்களை www.mofat.gov. bn/ index.php/announcement எனும் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி 17/01/2014 இக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# இந்தோனேசிய குகையில் திகிலூட்டும் சுனாமி

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் சுமத்ரா தீவிலுள்ள ஏசஹ் மாகாணத்தில் குகையொன்று இருப்பது கண்டறியப்பட்டது. இக்குகையில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் சுனாமி பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்துள்ளன.

சுமார் 7500 ஆண்டுகளுக்கு முன் இக்குகையை சுனாமி தாக்கியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. குகையிலுள்ள மணற்படிமங்கள், சிப்பி ஓடுகள், எஞ்சியுள்ள நுண்ணிய உயிரினங்களின் மாதிரியை சேகரித்து செய்யப்பட்ட ஆய்வில் 2004 க்கு முன் பாரியளவிலான 11 சுனாமிகள் ஏற்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1393, 1450ஆம் ஆண்டுகளில் மிகப்பெரிய அசுர பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் உறுதியாக கூறியுள்ளனர். இதன்போது கோடிக் கணக்கான மக்களுக்கு உயிர்ச்சேதம் நேர்ந்திருக்கலாம் எனவும் யூகிக்கப்படுகிறது.

இந்த ஆய்வு பற்றி ஆராய்ச்சியாளர் ரூபின்: கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டதால் இன்னும் 500 வருடங்களுக்கு சுனாமி வர வாய்ப்பில்லை. ஆனால் உடனடியாக நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் உறுதியாக கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.



அண்மையில் கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலாசார சாஹித்திய விழா, கலாசார உத்தியோகத்தர் வி. பற்பராசா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் உரையாற்றுவதையும் போட்டியில் வெற்றிபெற்றவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படத்தில் காணலாம்.



நூலகம் இணைய நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா ஜனவரி நான்காம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ன மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு அண்மையில் வெள்ளவத்தை சென்னை ஹோட்டலில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் தமிழ் ஆவண மாநாட்டு ஆய்வு மலர் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் 'பள்ளிக்கூடம்' என்ற இணையதளமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. நூலகம் இணையதளமானது இதுவரை 13 ஆயிரம் ஆவணங்களை ஆவணப் படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

படமும் தகவலும் ஜனாத் முஹம்மத்



கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய, 'பாம்புகள் குளிக்கும் நதி' கவிதை நூல் அறிமுக விழா அண்மையில் துணை இயக்குநர் வேடியப்பன் ஏற்பாட்டில் சென்னை கேகே நகரிலுள்ள டிஸ்கவரி புத்தக இல்லத்தில் நடைபெற்றது. கலைமாமணி விகேடி பாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புரவலர் டாக்டர் அப்துல்கையூம் முன்னிலை வகிக்க, கவிஞர் எஸ். ஜனூஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்வில் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர் : 13 இதழ் : 01 2014 ஜனவரி 01 - 14
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# பள்ளிவாசல்கள் பிரச்சினைக்குரியவையா?


தம்புள்ள பள்ளிவாசல் ஆக்கிரமிப்பில் தொடங்கப்பட்ட அடாவடித்தனங்கள் தெஹிவளை வரை தொடருமளவுக்கு முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்களான பள்ளிவாசல்கள் பிரச்சினைக்குரியவையா என்ற கேள்வி எழுகின்றது. இந்நாட்டில் வணக்கஸ்தலங்கள் அமைப்பது, பதிவுசெய்வது, முரண்பாடுகளை விசாரணை செய்வது என்ற விடயங்கள் சட்டத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களம், வக்புசபை, வக்பு மேன்முறையீட்டு மன்றம் என்பன சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளாகும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. சமயத்தை பின்பற்றவும் பிரச்சாரம் செய்வதற்கான கூட்டம் கூடவும் சட்ட யாப்பு அனுமதியளிக்கின்றது. பள்ளிவாசலிலோ அல்லது வேறொரு தனியார் கட்டிடத்திலோ கூட்டம் கூடுவதை அல்லது தொழுவதை தடைசெய்யும் உரிமை பொலிஸாருக்கு வழங்கப்படவில்லை. ஒரு சாராருக்கு ஏதாவது இடைஞ்சல், அமைதிக்குப் பங்கம் அல்லது உயிர் உடமைகளுக்கான அச்சுறுத்தல் போன்றவை தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்படுமிடத்து மட்டுமே சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க பொலிஸார் அழைக்கப்படுகின்றார்கள். பள்ளிவாசல் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை என்ற விடயம் பொலிஸாருக்கு தொழுகையை தடைசெய்யும் அதிகாரத்தை வழங்காது. சட்டப்படி அங்கீகாரமற்ற கட்டடங்கள் தொடர்பில் உரிய இடங்களுக்கு முறைப்பாடு செய்யப்படுவதன் அடிப்படையில் அவை விசாரணை மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் மட்டுமே எந்தக் கட்டடம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கமுடியும். அனுமதி பெறாத சாதாரண வர்த்தக அல்லது குடியிருப்பு சட்டங்களுக்கு அப்படியென்றால் வணக்கஸ்தலங்களில் எவ்வாறு பொலிஸார் அதிகாரம் செய்யமுடியும்? தொழுகையை நிறுத்தும்படி கட்டளையிடும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்தால் 'இல்லை' என்பதுதான் தெளிவான விடை.


குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனிய குனிய குட்டுபவனும் மடையன் என்று நம் முன்னோர் வழக்கில் ஒரு கூற்றுள்ளது. பள்ளிவாசல்கள் விடயத்தில் 'தடியெடுத்தவன் சண்டைக்காரன்' என்று செயற்படுபவர்களைப் பார்த்துப் பார்த்து பள்ளிவாசல்கள் அமைப்பது, தொழுவது, பள்ளிவாசலில் கூடுவது எல்லாமே இந்நாட்டில் சட்டவிரோதமானதாக மாறிவிடுமே என்று யோசிக்குமளவுக்கு நமது நிலைமை மாறிவிடக்கூடாது. சகவாழ்வு, புரிந்துணர்வு, சமாதானம் என்பதெல்லாம் எவ்வளவு முக்கியமோ அதனை விட சுதந்திரம், உரிமை என்பன முக்கியமானவை.

தொழுவதற்கும் ஏனைய வணக்க வழிபாடுகளுக்கும் பள்ளிவாசல்கள் தேவை. ஊரில் சனத்தொகைக்கு ஏற்பவும் அன்றாடம் ஐவேளை சென்றுவரும் வசதி கருதியும் எவ்வளவு இடைவெளிக்கு இடையில் பள்ளிவாசல்கள் அமையவேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும். குர்ஆன் மத்ரஸா, அரபுக்கல்லூரி, தொழில் புரியும் வர்த்தக கட்டடங்கள், கடைத்தொகுதி, பஸ்நிலையம், விமான நிலையம் போன்றவற்றிலும் தொழுமிடங்கள் (முஸல்லா) தேவை. பள்ளிவாசல்களை சட்டரீதியானதாக்கிக் கொள்ளும் பொறுப்பு அதனை அமைப்பவர்களைச் சாரும். அதற்கென்று அரசாங்கம் ஒரு திணைக்களத்தையே உருவாக்கியுள்ளது. அப்படியிருக்க, ஏன் அவற்றை பதிவுசெய்ய நம்மவர்கள் தாமதிக்கிறார்கள் அல்லது தயங்குகிறார்கள் என்பது விளங்காத புதிராகவே இருக்கிறது.

பள்ளிவாசலை பதிவுசெய்யுமாறு கோரும் உரிமை எவருக்குமுண்டு. யாரும் விளையாட்டாக பள்ளிவாசல் கட்டுவதில்லை. குறுகிய நோக்கத்திற்காக பள்ளிவாசல்கள் கட்டப்படுவதுமில்லை. முஸ்லிம்கள் குடியிருக்கும் இடங்களில் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டதும் உடனடியாக பதிவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவர்கள் கேட்கும் ஆவணங்களை சமர்ப்பித்தால் பதிவுசெய்யாமல் இருக்கமுடியாது. இதுவரை பதிவற்றவர்கள் இன்னும் தாமதிக்காது அதனை பதிவுசெய்ய வேண்டும். பதிவுசெய்ய மறுப்பது உரிமை மீறலாகும். அப்படியான சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தின் துணையை நாடவேண்டும் என்பதுடன் இந்நாட்டின் பிரஜைகளான முஸ்லிம்கள் உரிமையுடன் வாழ சட்டரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாம் தயங்கக்கூடாது.




# சொல் வெட்டு





மஹிந்த அரசை ஒரு மணிநேரத்தில் வீழ்த்த முடியும்

- ஜே.வி.பி. -

ஒங்கட ஆட்டோட்டமெல்லாம் அப்பதான்



மனித உரிமைகள் தொடர்பில் எந்த நாடும் இலங்கையை அச்சுறுத்தவில்லை

-அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம-

சும்மா பொய் சொல்லாதீங்க சேர்



மொழிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாலே நல்லிணக்கம் சாத்தியமாகும்

-அமைச்சர் வாசுதேவ-

அப்போ... இனி நல்லிணக்கம் என்கிறதே சாத்தியமில்ல என்குறீங்க...?



நாட்டை ஆள்வது ஜனாதிபதியா, சம்பந்தனா என்பது சந்தேக மாகவே உள்ளது

-பொதுபலசேனா-

அடிசக்க...! சந்தேகப் பிறவியாவே இருக்கியளே...



ராஜபக்ஷ அரசின் தேவைகளையே பொலிஸார் நிறைவேற்று கின்றனர்

-பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்-

நன்றியுடமை



சோகம் மாநாட்டுக்கு முன் பிடிபட்ட 240 தெரு நாய்களும் கொலை

-விலங்குகள் அகிம்சை நிதியத்தின் தலைவி-

அறிக்க விர்றியள்... கவனம் டீச்சர்...

எங்கள் தேசம் சந்தா விபரம்


உள்நாடு: தனிப்பிரதி: 30.00 | வருட சந்தா: 1200.00 | ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00 | மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 | இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி விட்டுச்சென்ற வடுக்கள் இன்னும் நீங்கவில்லை



யூ.எம். இஸ்ஹாக்

சுனாமி உலுக்கி ஒன்பது வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவில் 9.6 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு உலகில் நீங்காத வடுக்களை விட்டுச் சென்றுள்ளன.

டிசம்பர் 26, 2004 அன்று ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலையினால் பல்வேறு நாடுகள் பாதிப்புக்குள்ளாகின. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, மாலைதீவு போன்ற பல நாடுகளில் சுனாமிப்பேரலை தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ் அனர்த்தத்தினால் உலகில் மொத்தமாக 2,30,000 பேர் உயிரிழந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த சுனாமி அனர்த்தம் தென்கிழக்காசிய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியதுடன் அந்நாடுகளால் இலகுவில் மீள முடியாத பாரிய சுமையையும் ஏற்படுத்தியது. குறிப்பாக, இலங்கை போன்ற நாடுகள் இன்னும் அதிலிருந்தும் முழுமையாக மீளவில்லை என்பதே வெளிப்படை.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களான அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வன்னி, மாத்தறை, கொழும்பு போன்ற பல மாவட்டங்களில் சுனாமி பாதிப்பேற்படுத்தியது. இவ்வனர்த்தத்தினால் இலங்கையில் 30,196 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தற்போது சுனாமி என்ற சொல் இலகுவாக பலராலும் உச்சரிக்கப்பட்டாலும் 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுனாமி அனர்த்தம் தொடர்பில் பெரியளவு பரீட்சயம் இருக்கவில்லை. அனர்த்தங்கள் தொடர்பில் மக்களும் இந்நாட்டு அரசாங்கமும் தயார் நிலையில் இருக்கவில்லை. அனர்த்த முகாமைத்துவப் பிரிவு இலங்கையில் சுனாமிக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கை பாதிக்கப்பட்டபோது இந்நாட்டின் மீது அப்போதிருந்த நல்லெண்ணம் மற்றும் வெளியுறவுக் கொள்கை காரணமாக பெருமளவு வெளிநாட்டு உதவிகள் இலங்கைக்கு கிடைத்தன. இலங்கையின் அழிவுகளை மீள் கட்டுமாணம் செய்வதற்கு பல வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் பணியாற்ற முன்வந்தன. இருப்பினும் இலங்கையில் சரியான அனர்த்த நிவாரண முகாமைத்துவம் இன்மையால் பல கோடி நிதிகள் பயனற்ற விடயங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இன்று பல வீட்டுத்திட்டங்கள் பொருத்தமற்றதாகவும் மக்கள் குடியிருக்க முடியாமல் கைவிடப்பட்டு பாழடைந்து கிடக்கின்றன. அதேபோன்று பாடசாலை கட்டிடங்கள், பல்தேவைக் கட்டிடங்கள் எனப் பல பயன்படாமலுள்ளன. மேலும், சரியான வழிகாட்டலில்லாமல் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் தோல்வியடைந்தன. இது பல கோடி பெறுமதியான நிதிகள் விழலுக்கு இறைத்தது போன்றதானது. இவை சரியாக முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்குமாக இருந்தால் நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தியிருக்க முடியும்.

மேலும், இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் பெருமளவில் பாதிப்படைந்தன. பாண்டிருப்பு, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற பிரதேசங்கள் பாதிப்படைந்தன. இம்மாவட்டத்தில் மாத்திரம் 5000 பேர் உயிரிழந்தார்கள்.



இம்மக்களின் உடமைகளும் சொத்துக்களும் கடலனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்டன.


இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு உதவிகள் கிடைத்தன. இருந்தபோதிலும் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இன்னும் எவ்வித உதவிகள் கிடைக்காமலும் உள்ளனர். அக்கரைப்பற்று பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவூதி அரேபிய அரசாங்கத்தால் நுரைச்சோலையில் கட்டப்பட்ட 500 வீடுகள் இன்னும் கையளிக்கப்படாமல் உள்ளன.

இவ்வீடுகள் சவூதி அரசாங்கத்தின் பெருந்தொகையான நிதியினால் கட்டப்பட்ட முழுமையான வீட்டுத்திட்டமாகும். இவ்வீட்டுத்திட்டம் பள்ளிவாசல், பாடசாலை, சந்தைத்தொகுதி, பல்தேவைக் கட்டிடம்,

→ 17

# வகுப்பில் பிரளிபண்ணிய அரசியல்வாதிகள்

ஷிமால் ஸையயாப்



அவன் உருப்படவே மாட்டான் என்று ஆசிரியர்களால் திட்டுவாங்கும் பின்வரிசை மாணவர்களைக் கண்டிருப்பீர்கள். அத்தகையவர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் வித்தியாசமாகவே இருக்கும்.

- வகுப்பில் ஓரிடத்தில் இருக்க மாட்டார்கள்

- கேள்வி கேட்டால் பதில் சொல்லவு மாட்டார்கள்; பிறரை பதில் சொல்ல விடவுமாட்டார்கள்

- மற்றவர்களைக் குழப்புவதை தனது பொழுதுபோக்காகக் கொண்டிருப்பார்கள்

இத்தகைய மாணவர்கள் பலரும் வகுப்றையில் மாத்திரமன்றி, வீட்டுச் சூழலிலும் அதே குணங்குறிகளுடந்தான் நடந்துகொள்வார்கள். பிறர் பேசும்போது அதற்கு இடையூறு விளைவித்து அவர்களை அடக்கிவிடுவதை ஏதோ மலையைப் பிளந்த சாதனைபோல் பெருமைபட்டுக் கொள்வார்கள்.

இதே போன்றுதான் நமது பாராளுமன்றத்தைப் பார்க்கும்போதும் வகுப்பில் பிரளிபண்ணிய பின்வரிசை மாணவர்கள் பலர்தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்து சேர்ந்திருக்கிறார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது.

பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வோர் உறுப்பினரும் மக்களின் பிரதிநிதிகள். பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுசேர்ந்து தம் பிரச்சினைகளை, உரிமைகளைப் பேசும் ஒருவரை பிரதிநிதியாக பாராளுமன்றம் அனுப்பிவைக்கின்றனர். அவர் பாராளுமன்றத்தில் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அந்த சமூகத்தின் குரல். எனவே, அதற்கு மதிப்பளிப்பது மற்றைய உறுப்பினர்களின் கடமையாகும். காதுதாழ்த்திக் கேட்காவிட்டாலும் அதற்கு இடைஞ்சல் தராமல் இருப்பது நாகரிகமான அணுகுமுறை.

அதைவிடுத்து, மக்கள் பிரநிதிகளை பேசவிடாமல் கூச்சலெழுப்புவதும் கும்மாளமிடுவதும் அநாகரிகத்தின் உச்சகட்டமென்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

அண்மைக்காலமாக இலங்கை பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை பார்க்கும்போது வெட்கமாக இருக்கிறது. சில உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறையை பார்க்கும்போது சமூகமே வெட்கித் தலை குனிய வேண்டியுள்ளது.

[illegible] உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பீக்களும் பேசுவதற்கு எழுந்துநின்றாலே போதும்; அரச தரப்பு எம்பீக்கள் சிலருக்கு தீப்பற்றிவிடும். அவர்களால் ஆசனத்தில் அமைதியாக உட்கார்ந்திருக்க முடியாது போகும். கூச்சலும் கும்மாளமும் இட ஆரம்பித்து விடுவார்கள். அதேநேரத்தில் இவர்களுடன் சேர்ந்து நமது முஸ்லிம் தரப்பு பிரதி நிதிகளும் இணைந்திருப்பது வேதனைக்குரிய விடயமாகும். சில உறுப்பினர்கள் காட்டும் அநாகரிகம் முழு முஸ்லிம் சமூகத்தின் மீதான இழி சொல்லாக வந்துவிழுகிறது என்பது, இந்த கூப்பாடு போடும் முஸ்லிம் ஆசாமிகளுக்கு தெரிவதாக இல்லை.

இது நாங்கள்விட்ட தவறு. திண்டுக்கல் லியோனியின் பட்டிமன்றத்துக்கு போகக்கூடியவர்களை எல்லாம் எமது பிரதிநிதிகளாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கும் நம்மை நாமே குறை சொல்லிக்கொள்ள வேண்டியதுதான்.

பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியை பேசவிடாமல் தடுக்கிறோம் என்றால், அவரை நம்பி அனுப்பிவைத்த அந்த சமூகத்தின் குரல்வளையை பாய்ந்து நசுக்குகிறோம் என்பதை இந்த குளப்படிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் சிறப்புரிமைப் பிரச்சினை என்று இடையூறு விளைவிப்பதில் நமது சில எம்பீக்கள் ரெகோர்ட் வைத்திருக்கிறார்கள்.

பிறரின் கருத்து சுதந்திரத்துக்கு வேட்டுவைக்கும் இப்படிப்பட்டவர்களைக் கைதுசெய்தாலும் குற்றமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் புரட்சியில் முஸ்லிம்கள் பங்காளர்களாக மாறவேண்டும்



*மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களின் நினைவுப் பேருரை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் சிறப்புரையாற்றினார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.*

## பேராசிரியர் எஸ். சந்திரசேகரம்

ஒரு முஸ்லிம் தனக்கும் தனது குடும்பத்துக்கும் மட்டுமன்றி முழு சமூகத்துக்கும் தான் வாழும் நாட்டுக்கும் கடமையாற்ற வேண்டிய கொள்கையை இஸ்லாம் மார்க்கம் வலியுறுத்துகின்றது. நளீம் ஹாஜியார் இக்கொள்கைகளை மறவாது மஸ்ஜிதுகளை நிறுவினார், வறிய மக்களுக்கு வாழ்வளித்தார், கல்வி கற்க முடியாதவர்களுக்கு உதவினார். தமது மக்களுக்கு மாத்திரமல்லாமல் தாம் வாழும் நாட்டுக்கும் உதவ வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்த ஹாஜியார், 1970 களில் ஸ்ரீமா பண்டாரநாயக்க அரசாங்கத்துக்கு இன்றைய மதிப்பில் நாற்பது இலட்சம் ரூபாய் வெளிநாட்டு செலாவணியை அன்பளிப்பாக வழங்கினார்.

புரட்சி என்றால் பிரான்சிய புரட்சி, ஆபிரிக்க புரட்சி, பசுமைப் புரட்சி, ஜே.வி.பி. புரட்சி என்றுதான் ஞாபகத்துக்கு வரும். இவையெல்லாம் அரசியலுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றன. ஆனால், இன்று நடைபெறும் புரட்சி அறிவுமையப் புரட்சியாகும். அறிவுமையப் புரட்சி இன்றைய நூற்றாண்டில் அறிவு மிகத்துரிதமாக பெருகிவருகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. சென்ற நூற்றாண்டில் 50 ஆண்டுகளாக பரிணமித்த அறிவு, 5 ஆண்டுகளில் இன்று தோன்றிவிடுகின்றது.

உலக நாடுகள் உலகளாவிய ரீதியில் தம்மை அறிவுப் பொருளாதாரமாக மாற்றிக்கொள்ள முற்படுகின்றன. இலங்கை அரசாங்கமும் இத்தகைய உணர்வுடன் செயற்பட்டு வருகின்றது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் உதவியுடன் அறிவு சமூகத்திற்கான கல்வி எனும் செயற்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. வர்த்தகம், துறைமுகம் மட்டுமன்றி அறிவியல் துறைகளிலும் இலங்கை ஓர் அறிவுக்கேந்திரமாக மாறவேண்டும் என்று மஹிந்த சிந்தனை கூறுகின்றது.

இலங்கையில் 350 இற்கும் அதிகமான சர்வதேச பாடசாலைகள் இயங்கி வருகின்றன. தனியார் பல்கலைக்கழகங்களை அரசாங்கம் ஆதரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அறிவுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியினால் அரசாங்கம் சமூகத் தேவையை உணர்ந்து தமது கொள்கையை மாற்றவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டு அறிவு மற்றும் தகவல் மைய நூற்றாண்டு என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறான உயரிய சமூகத் தேவைகளை கருத்திற்கொண்டு நளீம் ஹாஜியார் முஸ்லிம்களுக்கான தனித்துவமான கல்வி நிறுவனங்களை அப்போதே உருவாக்கிவிட்டார்.

இன்று பாடசாலைக் கல்வியில் 1000 பாடசாலைத்திட்டம் தகவல் தொழிநுட்பக் கல்வி ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் வேண்டாம், தேசிய மொழியில் கற்றுக்கொள்வோம் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் அரசாங்கத்தின் சிந்தனைக்கு எதிராக சர்வதேச பாடசாலைகள் வளர்ச்சியடைந்துள்ளன. தமது பாடத்திட்டங்களில் தமிழ், சிங்களம் ஆகிய தாய்மொழிகளை இணைத்துக் கொள்ளுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

**நாம் எமது பழைய கால சுவடுகளைப் பற்றி சிந்திக்காமல் எதிர்காலவியலை நோக்கிய கல்வி முறைமையை சிந்திக்க வேண்டும். 2030 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம் சமூகம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நாம் இப்பொழுதே ஆராயவேண்டும்.**

கல்வியை கற்று முடிக்கலாம் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால், அறிவுப் பொருளாதார கல்வியைக் கற்றுமுடிக்க முடியாது. வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற சிந்தனை இன்று வளர்ந்துவருகின்றது. அறிவுப் பொருளாதாரம், தொழிநுட்ப வளர்ச்சியினால் எங்களுடைய அறிவை நாம் இற்றைப்படுத்தல் (Update) வேண்டும். ஆரம்பகாலத்தில் ஆசிரியருக்கு மாத்திரந்தான் எல்லாம் தெரியும் என்ற நிலை இருந்தது. இன்று இந்நிலைமாறி ஆசிரியர்கள் மாணவர்களுடன் இணைந்து கற்கும்முறை உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமக்கு தேவையானவற்றை தாமே தேடிக்கற்கின்ற மாணவர் மயக்கல்வி என்ற சிந்தனை வளர்ச்சியடைந்து வருகின்றது.

மேற்குலகில் ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளது. மாணவர்கள் ஆசிரியர்களை விட பல விடயங்களை அறிந்தவர்களாக இருக்கின்றார்கள். இன்று இணையதளங்களில் தாம் விரும்பியதை விரும்பியவாறு கற்கக்கூடிய அனைத்து வளங்களும் இருக்கின்றன. நாம் பிள்ளைகளுக்கு பாட விடயங்களை கற்பிக்காமல் பிள்ளைகள் சுயமாக எவ்வாறு கற்கலாம் என்பதை கற்பிக்கவேண்டும்.

எமது நாட்டுக்கு தேவையான அறிவையும் அறிவை உருவாக்கும் ஒரு சமூகத்தையும் ஏற்படுத்த வேண்டும். எங்களுடைய சந்ததியினர் அறிவுப் பொருளாதாரத்தின் உறுப்பினர்களாக மாறவேண்டும்.

கைத்தொழில் புரட்சி நடந்த போது நாம் பார்வையாளர்களாக மட்டும் இருந்தோம். இன்று அறிவுப் புரட்சி நடக்கிறது, அதில் நாம் பங்காளர்களாக மாறவேண்டும். பொருளாதார உற்பத்தியில் அறிவை பிரயோகிக்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிவை முகாமை செய்தல் உருவாகியுள்ளது. தரமான பாடசாலைக் கல்வி, தரமான உயர்கல்வி இல்லாமல், முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் அறிவுப் பொருளாதாரத்தின் பங்காளர்களாக மாறமுடியாது.

மேற்கு நாடுகளில் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் காலாவதியாகும் நிலை உருவாகியுள்ளது. இனிவரும் காலங்களில் 5 வருடங்கள்தான் ஒரு பட்டப்படிப்பு இருக்கும். நாம் எமது பழைய கால சுவடுகளைப் பற்றி சிந்திக்காமல் எதிர்காலவியலை நோக்கிய கல்வி முறைமையை சிந்திக்க வேண்டும். 2030 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம் சமூகம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நாம் இப்பொழுதே ஆராயவேண்டும்.

வளர்முக நாடு என்று எதை வைத்து நாம் அழைப்போம்; வருடாந்த வருமானத்தை அல்லவா. ஆனால், இந்நிலை இன்று மாறியுள்ளது. இன்று ஒரு நாட்டில் வாழும் சமூகம் பெற்றிருக்கின்ற கல்வித் தரத்தைப் பார்த்து அறிவார்ந்த நாடு, அறியாமையினால் பீடிக்கப்பட்ட நாடு என்ற வகைப்படுத்தும் காலத்தில் வாழந்து கொண்டிருக்கிறோம்.

மேற்காசியாவில் பஹ்ரைன், குவைத், ஓமான், கட்டார், சவூதி, ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகள் அறிவுப் பொருளாதார வளர்ச்சியில் மேற்கு நாடுகளுக்கு ஒப்பான வளர்ச்சியை நோக்கி நகர்கின்றன. இவ்வாறான முயற்சிகள் செய்யப்படுகின்ற காலப்பகுதிகளில் இலங்கை முஸ்லிம் சமூகம் தம்மை எவ்வாறு அறிவுப் பொருளாதாரத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும்.

### சஜாத் முஹம்மத்

இலங்கையில் முஸ்லிம்கள் அறிவுப் பொருளாதாரத்திற்கான வாய்ப்புகள் பற்றி ஆராயவேண்டும். இன்று திறந்த பொருளாதாரத்தின் வளர்ச்சியினால் அரசாங்கத்தில் மாத்திரம் தங்கியிருக்க வேண்டிய நிலை நீங்கியுள்ளது. இன்று திறந்த பொருளாதாரத்தின் தனியார் கல்விக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இது சிறுபான்மையினருக்கு சாதகமாகும். இதன் மூலம் எமது தேவைக்கேற்ப பாடசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் உருவாக்கலாம். சர்வதேச தொழிற்சந்தை எமக்கு சாதகமாக மாறிவருகின்றது. முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் ஆசிரியர்கள், முஸ்லிம் கல்வியியலாளர்கள், முஸ்லிம்களுக்கான பல்கலைக்கழக [illegible] என்பன எமக்கு சாதகமானவையாகும்.

→ 16

பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் அவர்கள் இலங்கையின் கல்வியியலாளர்களில் மிக முக்கியமான ஒருவர். இலங்கை முஸ்லிம்களின் கல்வி தொடர்பில் பல ஆய்வுகளைச் செய்துள்ளார். 'முஸ்லிம்களின் கல்வியும் செல்நெறிகளும்' என்ற தலைப்பில் இவர் எழுதும் தொடர் கட்டுரை எங்கள் தேசத்தில் வெளிவரவுள்ளது. அடுத்த இதழிலிருந்து வெளிவரவுள்ள இக்கட்டுரையை வாசகர்கள் தொடராக வாசித்து பயன்பெறலாம்.

# துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்



இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதான பயிற்றுவிப்பாளராக போல் பாப்பிரே தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை 2014 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பொறுப்பேற்றுக் கொள்வார் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட இவர் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் உப பயிற்றுவிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



உலகின் முதல் செயற்கை இதய மாற்று அறுவைச் சிகிச்சை பிரான்ஸ் வைத்தியர்களால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 75 வயதான ஒருவருக்கு செயற்கை இதயம் பொருத்தி பிரான்ஸ் வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர். இந்த செயற்கை இதயம் 5 வருடங்களுக்கு தொடர்ந்து செயற்படக்கூடியது என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட செயற்கை இதயங்கள் தற்காலிக பயன்பாட்டுக்கானவை இயற்கை இதயத்தை விட செயற்கை இதயத்தின் எடை அதிகம் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.



மூளையால் கட்டுப்படுத்தக் கூடிய செயற்கை கரமொன்று பிரித்தானிய பிரஜைக்கு பொருத்தப்பட்டுள்ளது. இவர் ஆப்கானிஸ்தானில் சேவையாற்றும் போது தாக்குதலுக்கு இலக்காகி கையொன்றை இழந்த படைவீரர். அவருக்கு ஆஸ்திரியாவிலுள்ள வியன்னா மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மேற்படி மனதால் செயற்படுத்தக்கூடிய செயற்கை கரத்தை பொருத்தியுள்ளனர். மேற்படி அறுவைச் சிகிச்சைக்கு 7 மணித்தியால நேரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறுவைச் சிகிச்சைக்காக 60 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் செலவிடப்பட்டுள்ளது.



ஏகே 47 துப்பாக்கி வடிவமைத்த மிகெய்ல் கலஷின்கொவ் இயற்கை எய்தினார். ரஷ்யாவின் அல்டாய் மலைப் பகுதியில் 1919 ஆம் ஆண்டு மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த அவர் தனது 94 ஆவது வயதில் காலமாகியுள்ளார். ஏகே 47 என்ற தன்னியக்க துப்பாக்கி உலகளாவிய ரீதியில் மிகவும் பழக்கப்பட்ட ஒன்றென்பதுடன், பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் உற்பத்திச் செலவு குறைந்த ஏகே 47 துப்பாக்கி நம்பகத்தன்மையானதும் பராமரிக்க இலகுவானதுமாகும். உள்ளக இரத்தக் கசிவு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.




இங்கிலாந்தில் பிளாஸ்டிக் நோட்டுகளை புழக்கத்தில் விட இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது. உலக நாடுகளில் காகித நோட்டுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சில நாடுகளில் எளிதில் கிழியாத, கசங்காத பிளாஸ்டிக் நோட்டுகளும் பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில் இங்கிலாந்து நாட்டின் பேங்க் ஆப் இங்கிலாந்து பிளாஸ்டிக் வகை நோட்டுகளை தயாரிக்க 3 ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது. முடிவில் பாலிமர் வகை பிளாஸ்டிக் நோட்டுகளை அச்சடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து வரலாற்றில் முதல் முறையாக 2016 இல் இருந்து இந்த பாலிமர் நோட்டுகள் பயன்பாட்டுக்கு வரவுள்ளன. இதற்கிடையில், பாலிமர் நோட்டின் பயன்பாடு எதிர்விளைவு குறித்து 13 ஆயிரம் பேரிடம் கருத்து கேட்கப்பட்டது. இதில் 87 சதவீதம் பேர் பாலிமர் நோட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் பார்வை



எம்.ஏச்.எம். ஹஸன்

# ஜெனீவா பிரச்சினைக்கு இந்தியா கைகொடுக்குமா?

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் கூடும் சர்வதேச மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. மனித உரிமை மீறல் தொடர்பாக பரித்தானியா, கனடா, அமெரிக்காபோன்ற நாடுகள் இலங்கையை எச்சரித்துள்ளன. ஜெனீவா மாநாடு கூடுவதற்கு இன்னும் 70கும் குறைந்த நாட்களேயுள்ள சூழலில், இலங்கை இப்பிரச்சினையை எதிர்கொள்ளும் வியூகத்தை வகுத்துள்ளதா? அப்படியானால், அவை என்ன என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

இம்முறை, இலங்கை எதிர்கொள்ளப் போகும் சவால் 2012 ஐ விடப் பாரதூரமாக இருக்கும் என்று பேசப்படுகிறது. ஏனென்றால், இலங்கையில் வைத்து பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் ஊடகங்களுக்கு சில முக்கியமான கருத்துக்களை வெளியிட்டார். பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அவர் அதனை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தமிழ் டயஸ்போராவிடம் பணம் பெற்றுக்கொண்டு கமரூன் இவ்வாறு செயற்படுகிறார் என்றும் அதன் பேரிலேயே அவர் யாழ்ப்பாணம் சென்றார் என்றும் இலங்கையின் இனவாத அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. இலங்கையின் அரசியல்வாதிகள், ஊடகங்கள் பிரித்தானியப் பிரதமரைப் பற்றி எதனைக் கூறினாலும் அவர் பிரித்தானியாவில் இன்னும் பிரதமர் என்பதை மறந்து விட்டுப் பேசமுடியாது.

பிரித்தானியாவின் ஆளுங்கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் தலைவரும் இதே கருத்தை பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மனித உரிமை மீறல் குறித்து திருப்திகரமான உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்காவிட்டால், சர்வதேச விசாரணைக்காக ஐ.நா. வில் ஒரு பிரேரணை கொண்டுவரப்படும் என்பது பிரித்தானியப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட முக்கிய கருத்தாகும். இதற்கு முன்னரும் பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சராயிருந்த டேவிட் மிலிபாஹ்ண்டு பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் பர்னார்ட் குஷ்னரும் இணைந்து 2009 இல் இத்தகைய ஒரு பிரேரணைக்கு முயன்றமையும் குறிப்பிடத்தக்கது. அந்தநேரம் அதனை முறியடிப்பதில் இலங்கை வெற்றிபெற்றது. அதனை ஏன் 2012 இல் செய்ய முடியவில்லை என்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பனரும் சந்திரிகா அரசின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர கூறும் காரணம், இலங்கை மேற்கத்திய நாடுகளை பகைத்துக்கொண்டது என்பதாகும். இதுபற்றி கருத்து வெளியிடும் அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக வேறு ஒரு காரணத்தை முன்வைக்கிறார்: அன்று மேலை நாடுகளுக்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளின் ஆதரவைப் பெறும் நிலையில் இலங்கை இருந்தது. இன்று பல மூன்றாம் உலக நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் நிலையில் அல்லது வாக்களிப்பில் மௌனம் சாதிக்கும் நிலையிலுள்ளனஎன்று அவர்கூறுகிறார்.

மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ கூட்டமைப்பில் மூன்றாம் உலக நாடுகளே அதிக எண்ணிக்கையிலுள்ளன. 47 அங்கத்துவ நாடுகளில் 34 ஆசிய, ஆபிரிக்காவைச் சேர்ந்தவையாகும். அதாவது, 72 வீதமான வாக்குகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கைகளிலுள்ளன. மேற்கு நாடுகளையும் பகைத்துக்கொண்டமையால் அவற்றுள் பெரும்பாலானவற்றை வென்றெடுக்க முடியாது போனமையே இலங்கை எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினை என கலாநிதி ஜயதிலக மேலும் கூறியுள்ளார். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையிலுள்ள ஒரு கோளாறு பற்றியே இந்த இருவரும் சுட்டிக்காட்டுகின்றனர் என்பது தெளிவு.

இலங்கை 2009 இல் வாக்குகள் பெற்றது. 2012 இல் அமெரிக்காவின் தலைமையிலான முன்னெடுப்பு கூட 25 வாக்குகள் தான் பெற முடிந்தன. இலங்கை மூன்று, நான்கு வருடங்களில் அடைந்துள்ள பின்னடைவையே இது காட்டுகிறது. இதன் பின்னால் பல காரணங்கள் இருப்பினும் முதன்மைக் காரணமாக குறிப்பிட முடியுமானது, அயல் நாடு இந்தியாவுடனான உறவை முறையாக முகாமைத்துவம் செய்யாமையாகும். இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் மேலை நாடுகள் பல சதிகளில் ஈடுபட்டன. யுத்த நிறுத்தம் செய்து புலிகளைக் காப்பாற்றும் முயற்சியும் இருந்தது. அந்நேரத்தில் இந்தியா மட்டும் இலங்கையுடன் ஒத்துழைக்காவிட்டால் மேலை நாடுகளின் திட்டம் நிறைவேறியிருக்கும். இந்தியாவின் சம்மதமின்றி யுத்த நிறுத்தம் செய்யமுடியாது என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியதை இந்தியா ஆதரித்தமையால் மேற்கு கையைக் கட்டிக்கொள்ள வேண்டியேற்பட்டது.

இந்தியா, இலங்கைக்கு உதவும்போது இருநாட்டுத்தலைவர்கள் புரிந்துணர்வில் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துதல், 13 இற்கு அப்பால் அதிகாரப் பகிர்வு வழங்குவது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசுதல் என்பன முக்கிய உள்ளடக்கமாக இருந்தன. ஆனால், யுத்தம் வெற்றியடைந்த பின், புரிந்துணர்வு ஒப்பந்தம் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை தன்னை ஏமாற்றியதாக இந்தியா நினைக்கிறது. இந்தியாவை திருப்திப்படுத்தியிருப்பின் மூன்றாம் உலக நாடுகளை இழக்க வேண்டி ஏற்பட்டிருக்காது என்பதே கலாநிதி தயான் ஜயதிலக கூறும் மற்றொரு விடயமாகும்.

**இலங்கை தன்னை ஏமாற்றியதாக இந்தியா நினைக்கிறது. இந்தியாவை திருப்திப்படுத்தியிருப்பின் மூன்றாம் உலக நாடுகளை இழக்கவேண்டி ஏற்பட்டிருக்காது**

1987-1989 காலப்பிரிவில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்ட விரிசலுக்கு சமமான நிலை இப்போது தோன்றவுள்ளதாக நம்பப்படுகிறது. வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தி மிகவும் பிந்தியே அது நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் இலங்கையில் பலவாறு பேசப்படுகின்ற தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைகள் முன்னெப்போதுமில்லாத வகையில் சிக்கலடைந்துள்ளன. இந்தியா, மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளில் முக்கூட்டுகடற்படைப் பயிற்சியில் இருந்து இலங்கைக் கப்பல்களை உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டுள்ளார். தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு நியாயம் வழங்காமல் கூட்டுப்பயிற்சி சாத்தியமில்லை என்பது முதல்வரின் கருத்தாகும். இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள 210 மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரி நாகபட்டினத்தில் உண்ணாவிரதம் நடைபெற்றது. அவர்களில் 23 பெண்கள் மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தமிழ்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்திய அதேநேரம், இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும் பாரிய பிரச்சினை நிலவுகிறது. கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்திய கடற்தொழில் அமைச்சரை சந்தித்து பேசவுள்ளார் என்ற செய்தியும் வந்துள்ளது. தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமிடையே ஒரு கெடுபிடி யுத்தமாக இது மாறியுள்ளது. இலங்கைத் தமிழருக்கு நியாயம் வழங்கக் கோரும் தமிழ்நாட்டுப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இப்போது மீனவர் பிரச்சினையும் மாறியுள்ளது.

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

(தொடர் 30)

**போராட்டங்களின் போதும் உலக விவகாரங்களிலும் பகுத்தறிவின் அடிப்படையில் செயற்படுவதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அனுமதி இருந்தது என்ற விடயத்தில் அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர்**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஜ்திஹாத் செய்யவில்லை என்பதற்கு ஆதாரமாக, "அவர் தன் மன இச்சையின்படி எதையும் பேசுவதில்லை. அது அறிவிக்கப்படும் வஹியே தவிர வேறில்லை" என்ற அல்குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டியோருக்கு ஷௌக்கானி பின்வருமாறு பதிலளிக்கிறார்:

"அதன் மூலம் நாடப்படுவது அல்குர்ஆனாகும். ஏனெனில், அல்லாஹுத்தஆலா இதனை அவருக்குக் கற்றுகொடுப்பதெல்லாம் ஒரு மனிதர்தான்" (அந்நஹ்ல் :193)

என நிராகரிப்பாளர்கள் கூறியதை மறுத்துரைக்கும் வகையிலேயே இறக்கிவைத்தான். அவர்கள் குறிப்பிடும் கருத்தில் அவ்வசனத்தை நாம் விளங்கினாலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஜ்திஹாத் செய்யவில்லை என்ற கருத்தை அது காட்டமாட்டாது. மாற்றமாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஜ்திஹாத் மற்றும் வஹியின் அடிப்படையில் மார்க்க விவகாரங்களை மேற்கொண்ட போது மன இச்சையின்படி பேசுபவராகவன்றி வஹியின் அடிப்படையில் பேசுபவராகவே இருந்தார் என்பதையே அது காட்டி நிற்கிறது.

இன்னும், இவர்கள் இஜ்திஹாதை மறுப்போருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்வில் இடம்பெற்ற இஜ்திஹாத் நிகழ்வுகளை ஆதாரமாக வைத்து பதிலளித்துள்ளனர். "உமது தந்தை மீது கடனிருந்தால் நீர் என் செய்வீர்?" என வினவிய "நோன்பாளி முத்தமிடுவது குறித்து வினவிய உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு "நோன்பாளி வாய்க்கு தண்ணீர் செலுத்தி கொப்பளிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று வினவியதையும் "இஜ்திஹாத் தவிர" என அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு பதிலளித்ததையும் "அவரைக் கொலைசெய்ய முன் இந்தக் கவிதையை நான் செவியுற்றிருந்தால் நான் அவரைக் கொன்றிருக்கமாட்டேன்" என்று கூறியதையும் இவர்கள் உதாரணங்களாக முன்வைத்துள்ளனர்.

பெரும்பாலான அறிஞர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது என்றும் அதிகமான விவகாரங்களில் அவர்கள் இஜ்திஹாத் செய்துள்ளார்கள் என்றும் கூறுகின்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஜ்திஹாத் செய்வதில் பிழைவிட்டால் வஹி மூலம் அப்பிழை திருத்தப்பட்டு சரி எதுவென தெளிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் நபியவர்கள் பிழை மீது தொடர்ந்திருப்பது தவிர்க்கப்பட்டது. இது ஏனைய முஜ்தஹித்களுக்கு இல்லாத நபியவர்களுக்கு மட்டுமே உரிய சிறப்பம்சமாகும்.

இதனால்தான் உசூல் துறை அறிஞர்கள் இஜ்திஹாத் வழிமுறை மூலம் வ்ந்த சட்டங்களை (அல்வஹ்யுல் பாதின்) மறைவான வஹி எனக் குறிப்பிடுகின்றனர். அது வஹியாக இல்லாதபோதும் வஹியை ஒத்ததாகும்.

உலகியல் விவகாரங்களில் இஜ்திஹாத் செய்வதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அனுமதி இருந்தது என்பதை மேற்குறிப்பிட்ட இருசாராரும் ஏற்றுக்கொள்கின்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது இஜ்திஹாத் குறித்த முரண்பாடான கருத்துகளைக் குறிப்பிட்டுவிட்டு கஷ்புல் அஸ்ராரின் ஆசிரியர் அப்துல் அஸீஸ் பின்வருமாறு எழுதுகிறார்: போராட்டங்களின் போதும் உலக விவகாரங்களிலும் பகுத்தறிவின் அடிப்படையில் செயற்படுவதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அனுமதி இருந்தது என்ற விடயத்தில் அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. போராட்டங்கள் போன்ற விவகாரங்களில் இஜ்திஹாத் செய்வதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அனுமதியிருந்தது என்பதில் அவர்கள் உடன்பாடான கருத்தைக் கொண்டிருப்பது போல நபிகளாரின் இஜ்திஹாதிற்கு முரண்படுவதற்கும் மற்றோருக்கு அனுமதியுண்டு என்பதிலும் அவர்கள் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஹந்தக் யுத்தத்தின்போது மதீனாவின் விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியை நுத்பான் கோத்திரத்தாருக்குக் கொடுப்பதற்கு நபிகளார் எடுத்த முடிவுக்கு சஃது என்பவர் முரண்பட்டதையும் பத்ரு யுத்தத்தின் போது தங்குமிடத்தை தெரிவுசெய்த விடயத்தில் நபிகளாருடன் ஹப்பாப் பின் முன்திர் முரண்பட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவ்வாறே, அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்ற பரீராவுக்கு, அவரால் வெறுக்கப்பட்ட பரீரா மீது அதீத அன்பு கொண்ட அவரது கணவன் முகீஸிடம் மீளுமாறு நபியவர்கள் முகீஸுக்காக பரிந்துரைத்தபோது அதனை பரீரா ஏற்றுக் கொள்ளவில்லை. அவரிடத்தில் எனக்கு எந்த தேவையும் இல்லை என்று கூறி நபிகளாரின் பரிந்துரையை மறுத்துரைத்தார்கள்.

---

ஏ.பீ.எம். சஜீர்



# இரத்த உறவுகளைப் பேணுவது எமது கடமை

இஸ்லாம், உறவுகளோடு நல்லமுறையில் நடந்துகொள்வது தொடர்பாக வேறு எந்த மதமும் கொடுத்திராத அளவுக்கு அதிமுக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. இரத்த பந்துக்களோடு இணைந்து வாழ்வதை வலியுறுத்தும் அதே சந்தர்ப்பத்தில் இரத்த பந்துக்களை துண்டித்து வாழ்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் மறுமையின் வெற்றியையும் ஆசிக்கின்ற ஒரு முஸ்லிம் ஒருபோதும் இனபந்துக்களை துண்டித்து வாழமாட்டான். அவ்வாறு துண்டித்தது வாழும் ஒருவன் அதன் விபரீதத்தையும் அவனுக்கும் அல்லாஹ்வின் அருளுக்கும் இடையில் விடப்படுகின்ற திரையையும் உணர்வானானால் அவனது திடுக்கிடும் மனசாட்சி அவனை விசாரணைக் கூண்டின் முன் கண்டிப்பாக நிறுத்தும்.

நல்லமல்களை வீணடித்து தண்டனையை தேடித்தருகின்ற இப்பாவத்தை உணர்கின்ற முஸ்லிம் ஒருபோதும் உறவுகளைத் துண்டித்து வாழமாட்டான். ஏனெனில், அதன் விபரீதம் அளப்பெரியது. இதற்கு கீழ்காணும் ஹதீஸ் போதுமானதாகும்:

"ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள், யார் இரத்த உறவைத் துண்டித்து வாழ்கின்றாரோ அவர் சுவர்க்கம் நுழையமாட்டார்."

ஒரு மனிதனுக்கு சுவனம் கிடைப்பதென்பது இவ்வுலகமும் அதிலுள்ள அனைத்தையும் விட மேலானதாகும். அதேநேரம் அது கிடைக்காமல் போவதென்பது அதைவிட அழிவும் நஷ்டமும் வேறொன்றுமாக இருக்கமுடியாது.

ஒவ்வொருவரும் அவ்வப்போது பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாவது இயல்பானது. இந்நிலையில் அவனுக்கு பொருளாதார உதவிகள் தேவைப்படும். எமது பொருளாதார கஷ்டங்களுக்கு மனமுவர்ந்து பொறுப்புடன் உதவுபவர்கள் எமது உறவினர்களே. அதேபோன்று பொருளாதார விடயத்தில் ஏனையவர்களை விட நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் எமது உறவுகளே கையாள்வார்கள் என்பது நிதர்சனமாகும். உறவினர்களது அரவணைப்பு, பொறுப்புமிக்க ஆலோசனைகள், ஒத்துழைப்புகள் என்பன எம்மை மென்மேலும் பொருளாதார ரீதியாக வெற்றியடையச் செய்கின்றன. இவ்விடயத்தை பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுத்துகிறது:

"யார் ரிஸ்கும் (பொருளாதாரம்) ஆயுளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் தம் உறவினருடன் ஒட்டி வாழட்டும்" ( புஹாரி - முஸ்லிம்)

ஒவ்வொருவரின் வளர்ச்சியில் பங்குதாரர்களாகவும் வீழ்ச்சியிருந்து முன்னேறுவதற்கு கைகொடுப்பவர்களாகவும் எமது உறவினர்கள் உள்ளனர். உதவிக்கு மிகவும் கிட்டியவர்கள் எமது உறவினர்களே. அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு எம்மாலான உதவிகளை செய்யவேண்டியது மிக உயர்ந்த பொறுப்பாகவுமுள்ளது. இதை இஸ்லாம் நன்மை மிகுந்த ஒன்றாகவும் கருதுகின்றது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள், "ஏழைகளுக்கு தர்மம் செய்வது ஒன்றேயாகும் (ஒரு நன்மை). ஆனால், உறவினர்களுக்கு உதவி செய்வது (ஆதரிப்பது) இரண்டு (நன்மைகள்) ஆகும்." (அத்திர்மிதி)

ஒவ்வொருவர் மீதும் பொறுப்புக்கள் இருக்கின்றன. அப்பொறுப்புக்கள் எமக்கு அமானிதங்களாகும். நாம் பிறருக்கு நல்லவராகவும் குடும்பத்திற்கு வன்முறையாளராகவோ இருக்கமுடியாது.

இறைவன் இதைப்பற்றி தன் திருமறையில் கூறும்போது, "உறவினர்களுக்கு அவர்களுடைய உரிமையைக் கொடுத்துவிடுவீராக! மேலும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் (அவரவர் உரிமையைக் கொடுத்துவிடுவீராக) அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்புவோருக்கு இதுவே மிகச் சிறந்த வழிமுறையாகும் அவர்தான் வெற்றியாளர்." (30: 38)

இரத்த உறவை துண்டித்து வாழ்வதன் விபரிதத்தையும் இரத்த உறவுகளோடு சேர்ந்து வாழ்வதன் முக்கியத்துவத்தையும் அதன் பலன்களையும் விளக்கிய அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அவ்விரத்த உறவைப் பேணுவதற்கான வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் சொல்லாமலில்லை. அந்தவகையில் இரத்த பந்துகளுக்கிடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கும் அதனை மேம்படுத்திக் கொள்வதற்கும் இஸ்லாம் கூறும் விடயங்களை முழுமையாகப் பின்பற்றி செயற்படுத்த வேண்டும்.

ஒரு மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் இன்னொன்றின் மீது சார்ந்தே வாழ வேண்டிய தேவையுடையவனாக இருக்கின்றான். இந்நிலையில் மனிதன் தனது உறவினரோடு பல்வேறு வகையில் அந்நியோன்னியமாக வாழ்கின்றபோது அவனால் அமைதியான வாழ்க்கையை அனுபவிக்க முடியுமாகிறது. குடும்பத்தினருக்கு உதவி செய்தல், அன்பளிப்புச் செய்தல், மென்மையாக நடந்துகொள்ளல், அன்பளிப்புகளை வழங்கள் என்று இன்னோரன்ன செயற்பாடுகள் மூலம் குடும்ப உறவை நல்ல முறையில் பேணிக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

# இளஞ்செழியன் போட்ட தப்புக்கணக்கு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றை எடுத்துக்கொண்டால் 1948 முதல் 77 வரையிலான காலப்பகுதியை இருண்ட காலம் என்றே அழைக்கவேண்டும். இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகம் சுதந்திரத்தின் பின்னரான இலங்கை தேசிய அரசியலில் செல்வாக்கு செலுத்துவதைத் தவிர்க்கும் வகையிலேயே குடியுரிமைச் சட்டமும் வாக்குரிமைச் சட்டமும் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டன. அவர்கள் நாடற்ற சமூகமாக மாற்றப்பட்டனர்.

இந்த 'அபாயத்தை' சிங்களத் தலைவர்கள் மட்டுமின்றி வடக்கின் தமிழ் அரசியல் தலைமைகளும் உணர்ந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மலையகத்தில் இந்தியத் தமிழர்கள் ஏழு லட்சம் என்ற ஒரு பெரிய எண்ணிக்கையில் வாழ்வதும் அவர்கள் வசம் வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதம் தரப்படுதலின் பின்னணியில் இருக்கக்கூடிய எதிர்மறை அரசியலிலும் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கும் புரிந்திருந்தது. இந்திய வம்சாவளியின் இயல்பான பெருக்கம் நாளடைவில் வடக்கு தமிழர்களின் சனப்பெருக்கத்தை விஞ்சி, சிங்களவர் சனத்தொகைக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பெற்று, ஒரு தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்து விடலாம் என்ற அச்சத்தை ஜி.ஜி. பொன்னம்பலம் உணர்ந்திருந்தார்.

யாழ். தமிழ்ச் சமூகம் படித்த உயர்சாதி அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள சமூகமாக விளங்கியதோடு தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவ்வாறான ஒரு தமிழ் சமூகத்தை, படிப்பறிவில் குறைந்த, சாதியமைப்பிலும் தாழ்ந்த வகுப்பினர்களை பெருவாரியாகக் கொண்ட மற்றும் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சமூகம் எண்ணிக்கையில் முந்திச் செல்வதும் வாக்குரிமையைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதும் பொன்னம்பலத்தால் சகிக்கக் கூடியதாக இருக்கவில்லை.

இலங்கை தேசிய அரசியலில் யாழ். சமூகத்தின் வகிபாகத்தை வந்தேறு குடிகளான இந்திய வம்சாவளித் தமிழர்களிடம் இழக்கத் தயாரில்லை என்ற யாழ். அரசியல் தலைமையின் மனப்பான்மையை டி.எஸ். சேனநாயக்க தனது நோக்கத்தை நிறைவேற்ற பயன்படுத்திக் கொண்டார். இவ்விடத்தில், யாழ். தமிழ் சமூகமும் சிங்கள சமூகமும் ஒன்றிணைந்து செயல்பட்டன.

ஆனால், இதை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வேறுவகையில் நோக்கினார். இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை பறிக்கப்படுவதை அவர் எதிர்த்தார். அவர்களும் தமிழர்கள். அவர்கள் நமக்கு பலமாக இருப்பார்கள். அவர்களுடன் இணைந்து போராடலாம் என்பது அவரது அணுகுமுறையாக இருந்தது. பின்னர் தமிழ் காங்கிரஸிலிருந்து அவர் விலகி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தது வரலாறு.



அவர் கட்சி ஆரம்பித்த பின்னர் மலையகப் பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இலங்கை தி.மு.க. வை ஆரம்பித்து இளஞ்செழியன் எழுச்சிப் போராட்டங்களை மலையகத்தில் நிகழ்த்தியபோது எஸ்.ஜே.வி. அவருக்கு உறுதுணையாக நின்றார். மலையகத்தில் நடைபெற்ற போராட்டங்களில் கலந்துகொள்ளவும் செய்தார். அதேபோல, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போராட்டங்களில் இளஞ்செழியன் கலந்துகொண்டு மலையகத்தின் ஆதரவை வெளிப்படுத்தினார். ஒரு பொது நோக்கில் ஒன்றிணைந்து செயல்பட்ட தமிழ்-சிங்கள சமூகங்கள் திரும்பவும் வெவ்வேறாயின.

இப்படி, இரு பெருந் தமிழ்ச் சமூகங்கள் இணைவதும் ஒன்றிணைந்து பணியாற்றுவதும் பேரினவாத அரசியல்வாதிகளுக்கு பிடிப்பில்லை. இக்காலகட்டத்தில் இ.தி.மு.க. தலைவர் இளஞ்செழியன் தமிழர் மத்தியில் எழுச்சித் தலைவராகவும் அபிமானம் பெற்றவராகவும் திகழ்ந்ததால், அவரை மட்டந்தட்டி மூலையில் உட்கார வைப்பதற்கான நல்ல நேரத்துக்காக அன்றைய அரசாங்கம் காத்திருந்தது. இளஞ்செழியனின் போராட்டம், நாடற்றவர் என்ற நிலை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையே ஆதார கொள்கையாகக் கொண்டிருந்தது. மலையகத்தில் நாடற்றவர் நிலை நீக்கப்பட வேண்டும் என்பதற்காக போராட்டம், வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வேண்டும் என்ற போராட்டம் என இரு சமூகங்களும் ஒரு தளத்திலேயே அறுபதுகளில் இயங்கி வந்தன.

இன்றைக்கு நீங்கள் அறுபதுகளில் நிலவிய இந்த அரசியல் சூழலை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். வடக்கு, கிழக்கு, மலையகம் என முழுத் தமிழ் சமூகமும் போராட்டக் களத்தில் உரிமை கோரி போராட்டங்களை நடத்தி வந்ததையும் அது அப்படியே சமயோசிதமாகவும் சாமர்த்தியமாகவும் முன் நகர்த்தப்பட்டிருந்தால் எத்தனையோ சாதகமான அம்சங்களை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும்.

ஆனால், பேரினவாதிகள் என்றைக்கும் மிகச் சரியாக எதிர்வியூகம் அமைப்பதில் சிறந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் பொறுக்கவும் காலம் கனியும் வரை காத்திருக்கவும் தயார். தமிழ்த் தரப்போ மூளைக்கு வேலை கொடுப்பதை விட, உணர்ச்சி கொந்தளிப்புகளுக்கே முக்கியத்துவம் அளிப்பது வழக்கம். காலங்கடந்தும் இதில் மாற்றமே கிடையாது.

இவ்வாறு உரிமைகளுக்காக தமிழ்ச் சமூகம் போராடிக் கொண்டிருக்கையில், இளஞ்செழியன் திடீரென ஒரு காரியம் செய்தார்.


இளஞ்செழியனை ஒரு தமிழ் தீவிரவாதி என்பதாகவே அரசாங்கம் பார்த்தது. பொலிஸாரின் தொடர் தொல்லைகளுக்கு அவரது இ.தி.மு.க. ஆளாக நேரிட்டது. காடையர்களின் தாக்குதலுக்கு அவரது இளைஞர் பட்டாளம் அடிக்கடி இரையானது. இளஞ்செழியனின் கூட்டங்கள் குழப்பப்பட்டன.

எனவே, அவர் ஜே.வி.பி. வுடன் இணைந்து செயல்படுவது தனக்கும் தனது அமைப்புக்கும் பாதுகாப்பாக இருக்கும் என கணக்குப் போட்டார். பதிலுக்கு ஜே.வி.பி. யும் இளஞ்செழியனுடன் இணைந்து செயல்படுவதுடன் தமிழர்கள் தம்மீது கொணடிருக்கும் எதிர்மறை கருத்துக்களை மாற்றி அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளலாம் என்று கணக்குப் போட்டது. ஜே.வி.பி . கூட்டங்களில் தோழர் இளஞ்செழியன் உரையாற்றினார்.

ஆனால், இளஞ்செழியன், ஜே.வி.பி. ஓர் ஆயுத புரட்சிக்கு தயாராகிறது என்பதை இறுதிவரை அறிந்திருக்கவில்லை. இறுதியில் புரட்சி வெடித்து, அரசு அதை ஆயுத பலங்கொண்டு அடக்கியொடுக்கியதும் இளஞ்செழியன் பாடு திண்டாட்டமாகிப் போனது.

➡ 16

# எங்கள் தீவைக் கைவிட்டது யார்?



வடபுலத்தான்

தீவுப்பகுதிக்கு இரணை மடுக் குளத்தில் இருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்காக பெரும் போராட்டம் நடக்கிறது. ஆனால், தீவுக்கு வெள்ளவத்தையிலிருந்து ஆட்களைக் கொண்டு வரவேண்டும் என்றே சொல்வேன்.

முந்தி ஒரு காலம் ஊர்காவற்றுறை, கரம்பன், நாவாந்துறை. வேலணை, புங்குடுதீவு, சரவணை போன்ற இடங்களில் எல்லாம் ஏராளமான குடும்பங்கள் இருந்தன. பொழுதுபட்டால் ஊர்காவற்றுறைச் சந்தி கலகலப்பாகும். கொத்துரொட்டிக் கடைகளில் கூட்டம் அலைமோதும். தீவுப்பகுதி பஸ்கள் எப்போதும் ஒரு பக்கம் சரிந்து கொண்டே ஓடும். அந்தளவுக்கு பயணிகளால் அவை நிரம்பிவழியும்.

மாரியோடு புலரும் தை மாதத்தில் எங்கு பார்த்தாலும் புகையிலைத் தோட்டமும் வெங்காயப் பாத்திகளுமாகவே இருக்கும். தரவைகளில் எங்கு பார்த்தாலும் மாடுகள் மேயும். அந்நாட்களில் தீவைப்பார்க்க கண்கள் கோடிவேண்டும். அத்தனை அழகு.

இப்பொழுது தீவுக்குப் போனால், இதயத்தின் மேலே யாரோ பென்னாம் பெரிய கல்லைத்தூக்கி வைத்தமாதிரி இருக்கிறது. அந்தளவுக்கு அங்கு எல்லாமே வெறிச்சோடிப் போயிருக்கின்றன.

தீவுப்பகுதி ஆட்களெல்லாம் வெள்ளவத்தையில் இருக்கிறார்கள். அல்லது கொட்டாஞ்சேனை, வத்தளை, தெஹிவளை, நீர்கொழும்பில் வாழ்கிறார்கள். சிலர் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும். நாட்டுப் பிரச்சினையால் இடம்பெயர்ந்து போனவர்களில் பாதிப்பேர் இன்னும் ஊர் திரும்பவில்லை. எஞ்சிய பாதியில் பாதியாட்கள் புலம்பெயர்ந்து போய் விட்டார்கள். அப்படிப் போனவர்கள், போதாக்குறைக்கு ஊரிலிருந்தவர்களையும் அழைத்துவிட்டார்கள்.

இப்படியே எல்லாரும் போனால் ஊரில் என்னதான் மிஞ்சும்?

கரம்பனில் ஒரு காலம் கொடிகட்டிப் பறந்தவர்களின் வீடுகளெல்லாம் இப்போது காட்டுக்கொடிகள் படருது. எல்லைவேலிக்காக ஒரு காலம் கோட்டுக்கு ஏறியவர்களின் காணிகள் தேடுவாரில்லாமல் கிடக்கின்றன. பனம்பழத்துக்காக பங்குப் பிரச்சினைப்பட்டவர்களை எண்ணிப்பார்க்க சிரிப்புத்தான் வருகிறது. நாயுருவிப்பற்றைகள் வளர்ந்து பெரும்பாலான வீடுகளையும் தோட்டங்களையும் மூடிவிட்டன. இதுதான் இன்றைய தீவின் நிலை.

இன்று தீவிலிருப்பவர்கள் உண்மையில் தியாகிகளே. தங்களை அர்ப்பணித்தே இவர்கள் வாழ்கிறார்கள். அந்தளவுக்கு சனநடமாட்டம் இல்லாத தீவில் வாழ்ந்து முடிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வளவுக்கும் கடந்த காலத்தில் தீவுப் பகுதிக்கு செலவளிக்கப்பட்ட பணமோ மற்றப் பிரதேசங்களோடு ஒப்பிடும்போது அளவுக்கு அதிகமானதுதான்.

வீதிகள் போடப்பட்டிருக்கின்றன. மின்சாரம் வந்திருக்கிறது. வீட்டுத்திட்டம் கூட வந்து பலரும் கல்வீடு கட்டியிருக்கிறார்கள். ஆனாலும் எல்லா மக்களும் அங்கு மீள்குடியேறவில்லை.

தீவுப்பகுதிக்கு வருகின்ற தென்பகுதி மக்களும் இல்லையென்றால் தீவில் பேய் கண் தான் உறையும். இதை நினைக்க நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது.

பாதுகாப்பு வலயமும் ஊரிலில்லை. அது எங்களின் மனதில்தான் உள்ளது.

தீவுக்கு தண்ணீர் தேவைதானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலத்தொடர்பற்ற ஒரு நிர்வாக அலகை அரங்கேற்றினார்கள்**

**கிராம சேவகர் பிரிவுக்கு எல்லை வகுத்தார்கள்**

**45 ஆயிரம் முஸ்லிம்களுக்கு 29 கிராம சேவகர் பிரிவு**

**26 ஆயிரம் தமிழ் மக்களுக்கு 29 கிராம சேவகர் பிரிவுகளை உருவாக்கினர்**

கல்முனையில் காணி அதிகாரத்தை பங்கிட்டுக்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. இதை எவ்வாறு நடைமுறைச் சாத்தியமாக்க வேண்டுமென்றால் முதலில் இது சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பேசவேண்டும். அதற்கான அழைப்பு இந்தப் பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ்த் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் அவர்கள் முன்வரவில்லை. இருப்பினும் பேச்சுவார்த்தைக்காக எமது கதவுகள் திறந்திருக்கின்றன. இதற்காக தமிழ்த் தலைவர்களும் கல்முனை தமிழ் சமூகமும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன் என் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய செவ்வியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய விரிவான செவ்வி இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

*கேள்வி: கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவது தொடர்பில் தமிழ், முஸ்லிம் தரப்பினரிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த கருத்து முரண்பாட்டுக்கான காரணம் என்ன?*

பதில்: கல்முனையில் இரண்டு பிரதேச செயலகங்கள் இயங்கிவருகின்றன. முஸ்லிம்களுக்கு ஒரு பிரதேச செயலகமும் தமிழ் மக்களின் நிர்வாக விடயங்களை மேற்கொள்வதற்காக ஒரு பிரதேச செயலகமும் இயங்கி வருகின்றன. இந்த கல்முனை வடக்கு பின்னணியிலுள்ளனர். இவர்கள் சமூகங்களுக்கிடையிலான பிரச்சினையை ஏற்படுத்துவதற்கான விடயமாக இதனைக் கைக் கொள்கிறார்களோ என்ற சந்தேகம் எமக்கு எழுந்திருக்கிறது.

மேலும், தமிழ்தரப்பு எடுத்திருக்கும் இந்த அணுகுமுறையை ஆரம்பத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பொருத்தமற்ற நடவடிக்கை என சுட்டிக்காட்டியிருந்தார். தமிழ் தரப்பு எங்களுடன் பேசாமல் நேரடியாக பொதுநிர்வாக அமைச்சோடு பேச எடுத்துக்கொண்ட இந்த ஆரம்ப நடவடிக்கையினால் இன்று தமிழ், முஸ்லிம் தரப்பினரிடையே ஒரு கருத்து முரண்பாடும் மனக்கசப்பும் ஏற்பட்டிருக்கின்றன.

*கேள்வி: கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன?*

பதில்: கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் 1989ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த தமிழ் பிரதேச செயலகத்தின் உருவாக்கத்திற்கு பல பின்னணிகள் உள்ளன. குறிப்பாக கல்முனைப் பிராந்தியத்தில் அன்று தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒற்றுமையாகத்தான் இருந்தார்கள். இலங்கையின் சுதந்திர காலத்தில் கூட கல்முனை மாவட்ட வருமான வரி அலுவலகமாக இருந்தபோது அதில் பல தமிழ், முஸ்லிம் அலுவலகர்கள் கடமையாற்றியுள்ளார்கள்.

ஆனால் துரதிஷ்டவசமாக ஏற்பட்ட ஆயுதப் போராட்டம் மற்றும் கிழக்கில் 1985 ஆம் ஆண்டு நடந்த தமிழ், முஸ்லிம் இனக் கலவரம் ஆகியவற்றுக்கும் பிறகு, ஆயுததாரிகளுக்கு தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்த வேண்டிய தேவையிருந்தது.

இந்நிலையில் முஸ்லிம்களின் பிரதேசமான கல்முனையில் ஆயுததாரிகளால் இங்கு பல தேவையற்ற பிரச்சினைகள் உருவாக்கப்பட்டன. கல்முனையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைத்தொகுதி, எரிபொருள் நிலையம் என்பன சேதமாக்கப்பட்டன. அதேபோன்று பல உயிர்கள் கொல்லப்பட்டன. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போது முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது. அதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு கல்முனை எமது மண் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கத் தொடங்கினர். இதற்கு அப்பாவித் தமிழ் மக்களைப் பயன்படுத்தி தமிழ் ஆயுததாரிகள் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் அன்று இதே தமிழ் தலைவர்கள் வட கிழக்கு ஒன்றாக இருக்கவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று தெரிவித்து எமது கருத்துக்களைக் கேட்காமல் கிழக்கை வடக்குடன் பலவந்தமாக இந்திய அனுசரணையில் இணைத்தார்கள். கல்முனையில் 73 வீதமான முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில் 23 வீதமான தமிழ் மக்களை சேர்ந்து வாழவைக்க வேண்டும் என்று விரும்பாமல் இவ்வாறான ஒரு தமிழ் பிரதேச செயலகத்தை உருவாக்கினார்கள்.

கல்முனையிலிருந்து 73 வீதமான முஸ்லிம்கள் விருப்பங்களுக்கு மாறாக இலங்கையின் வரலாற்றிலே நிலத்தொடர்பற்ற ஒரு நிர்வாக அலகை கல்முனையில் அரங்கேற்றினார்கள். இந்த ஆயுதக்குழுக்களின் சதி திட்டத்திற்கு அன்றிருந்த தமிழ், முஸ்லிம் மக்கள் பலியாகினர். அன்று இந்த பிரதேச செயலகம் உருவாக்கப்பட்ட பொழுது கிராம சேவகர் பிரிவுக்கும் அவர்கள் எல்லை வகுத்தார்கள். அங்குள்ள பெரும்பான்மை

# கல்முனை தொடர்பாக பே
# தமிழ்த் தலைவர்கள் முன்

## பாராளுமன்ற உறு

தமிழ் பிரதேச செயலக விடயம் தொடர்பில் இன்று தமிழ், முஸ்லிம் தலைவர்களிடையே ஒரு முரண்பாடும் மக்களிடையே சந்தேகமும் ஏற்பட்டுள்ளன.

கல்முனையில் தமிழ் பிரதேச செயலகத்தை கோரி நிற்பவர்கள் அப்பிரதேச செயலகத்தின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகிய என்னோடு அல்லது கல்முனை மாநகரசபை மேயர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் அல்லது முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமையுடனோ பேசவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் தமிழ் தரப்பினர் முறையான அணுகுமுறையை மேற்கொள்ளவில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலே பொதுநிர்வாக அமைச்சுடன் பேசுகிறார்கள். அத்தோடு கல்முனையோடு சம்பந்தப்படாத மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர், கல்முனை மாநகரசபைக்கு அப்பாற்பட்ட திருக்கோவில், தம்பிலுவில், காரைதீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெரும்பான்மையானோர்தான் பாராளுமன்றத்திற்கு வருகை தந்து பிரதேச செயலகத்தை கோரினர். அத்தோடு அம்பாறையைச் சேர்ந்த விகாராதிபதி ஒருவரும் அமைச்சர் தயாரத்ன, பிரதி அமைச்சர் சரத் வீரசேகர போன்றோரும் இதற்கு

நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ்
படப்பிடிப்பு: சபீக் ஹூசைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாக இருந்த, அதாவது 45 ஆயிரம் முஸ்லிம்களுக்கு, 29 கிராம சேவகர் பிரிவுகளையும் 26 ஆயிரம் தமிழ் மக்களுக்கு 29 கிராம சேவகர் பிரிவுகளையும் உருவாக்கினார்கள்.

அத்தோடு பலவந்தமாக, மிக திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம்களின் பெரும்பான்மையான வர்த்தக நிலையங்களைக் கொண்ட பஸார் பிரதேசம், இஸ்லாமபாத், நற்பிட்டிமுனை, கல்முனை மேற்கிலுள்ள முஸ்லிம்களின் வயற்காணிகள் என்பன கல்முனை தமிழ் பிரதேசத்தின் கீழ் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இன்றும் அந்த எல்லை நிர்ணய விடயத்தில் இழைக்கப்பட்ட தவறினால் முஸ்லிம்கள் மாத்திரமல்ல கல்முனையில் அமைதியை விரும்புகின்ற தமிழ் மக்களும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் கல்முனையில் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட நிர்வாக எல்லைக்கு நியாயமான தீர்வு காணப்படும் வரை காணி அதிகாரம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படக் கூடாது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு காணி அதிகாரம் வழங்கப்படவில்லை. காணி அதிகாரத்தைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் வழங்கப்பட்டு அப்பிரதேசம் இயங்கிவருகிறது.

இந்தக் காணி அதிகாரம் சம்பந்தமாக எமக்கு பல கசப்பான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. தலைவர் அஷ்ரஃப் அவர்கள் கல்முனை நகரத்தில் பல அரச திணைக்களங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கிய போது புதிய நகரத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக நிர்வாக கட்டிடத் தொகுதி ஒன்றை நிறுவுவதற்கு கல்முனைத் தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன் ஆக 3000 ஏக்கர் நிலப்பரப்பல் 80 ஏக்கர் காணி நிலப்

**கல்முனை முஸ்லிம்களின் பெரும்பான்மையான வர்த்தக நிலையங்கள் வயற்காணிகள் இஸ்லாமபாத் நற்பிட்டிமுனை என்பன தமிழ் பிரதேசத்தின் கீழ் இணைக்கப்பட்டிருக்கின்றன**

# பசுவதற்கு வரவேண்டும்

## றுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ்

பரப்பை சுவீகரித்து கட்ட முனைந்தார். இது சம்பந்தமாக தமிழ் மக்களை அழைத்து கலந்துரையாடினார். இவர்களுக்கு நிவாரணங்களையும் நஷ்டஈடுகள் என்று பல சலுகைகளைத் தர முன்வந்தும்கூட எந்தவிதமான நியாயமுமில்லாமல் கண்மூடித்தனமாக எதிர்த்தார்கள். அதற்கு அன்றிருந்த புலிகள் மற்றும் ஆயுத இயக்கங்கள் பின்னணியாக இருந்தன. அதன் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டது. இன்று அதனது விளைவை கல்முனை அனுபவிக்கிறது.

அதன் பிறகு தற்போதை தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் 2002 ஆம் ஆண்டு கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது தலைவர் அஷ்ரஃப் அவர்களின் திட்டத்தை மீண்டும் செய்ய முற்பட்டபோதும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு பலரும் முயற்சிகள் எடுத்தும் அம்முயற்சிகள் தமிழ் தரப்பினரால் முட்டுக்கட்டை போடப்பட்டு தடுக்கப்படுகின்றன.

கல்முனை, முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நகரம். எனவே இது அபிவிருத்தியில் ஒரு பெரிய இடத்தை அடைந்துவிடக்கூடாது என்று கல்முனைக்கு வெளியிலுள்ள அரசியல் தலைமைகள் விரும்புகின்றதோ என்ற சந்தேகம் எங்களுக்கிருக்கிறது. வரலாற்றில் பல கசப்பான சம்பவங்கள் நடந்திருப்பினும் இவற்றை ஒரு புறம் வைத்துவிட்டு இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும் என்று தான் முஸ்லிம் காங்கிரஸ் விரும்புகிறது.

கேள்வி: இந்த தமிழ் பரதேச செயலகம் தொடர்பாக உடன்பாடொன்றைக் காண்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்வதற்கான முயற்சிகள் ஏதும் நடைபெறுகின்றதா?

பதில்: கல்முனையில் தமிழ் மக்களுக்கு என்றும் முஸ்லிம் மக்களுக்கு என்றும் தனித்தனியான பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. இங்குள்ள பிரச்சினை காணி அதிகாரம் மாத்திரந்தான் என்றில்லை. அந்தக் காணி அதிகாரத்தை பங்கிட்டுக்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. இதை எவ்வாறு நடைமுறைச் சாத்தியமாக்க வேண்டுமென்றால் முதலில் இது சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பேசவேண்டும். அதற்கான அழைப்பு இந்த பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ்த் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. எமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் செயலாளர் நாயகம் ஹஸன் அலி ஆகியோர் கடிதம் மற்றும் தொலைபேசி மூலம் தமிழ்த் தரப்புக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் அவர்கள் முன்வரவில்லை. இருப்பனும் பேச்சுவார்த்தைக்காக எமது கதவுகள் திறந்திருக்கின்றன. இதற்காக தமிழ்த் தலைவர்களும் கல்முனை தமிழ் சமூகமும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன்.

கேள்வி: கல்முனையின் அபிவிருத்தியின் போது தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதாக நீங்கள் மேயராக இருந்தபோது கூட தமிழ்த் தரப்பனரிடமிருந்து குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இது சம்பந்தமாக உங்களது கருத்து என்ன?

பதில்: இக்கருத்தை நான் முற்றாக மறுக்கிறேன். உண்மையில் நான் கல்முனையின் மேயராக இருந்தது சுனாமியால் பாதிக்கப்பட்ட காலகட்டத்தில். நிறைய வெளிநாட்டு உதவிகள் வந்தன. அவற்றை முஸ்லிம் பிரதேசங்கள் என்றில்லாமல் தமிழ் பிரதேசங்களுக்கும் சமனான சேவைகளை வழங்கியுள்ளேன்.

இருந்தும் தமிழ் மக்களுக்கு கல்முனை மாநகரசபை விடயத்தில் தேவையொன்று இருக்கிறது. கல்முனையில் மேயர், பிரதி மேயர், ஆளுநர் ஆகிய அனைவரும் முஸ்லிம்கள் என்ற பிரச்சினை காணப்படுகின்றது. இதற்கு முஸ்லிம் காங்கிரஸோ, கல்முனை முஸ்லிம்களோ காரணமல்ல. இதற்கு கடந்த காலத்திலுள்ள உள்ளூராட்சி கட்டமைப்புத்தான் காரணமாகும். எந்தக் கட்சி அதி கூடிய விருப்புவாக்குகளைப் பெருகிறதோ அக்கட்சியிலிருந்துதான் மேயரோ, உதவி மேயரோ வர முடியும். இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இப்படியான நிலைமையிருக்கும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து ஒருவரை பிரதி மேயராக வைக்க முடியாது. அதற்கு சட்டம் இடங்கொடுக்காது.

கல்முனை பட்டின சபையாக இருந்த போது அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் நலன்களை கவனிப்பதற்கு கல்முனை சபையின் உப தலைவரைக் கொடுத்த வாரலாறுகள் உண்டு. இதற்கு காரணம் அன்றிருந்த தேர்தல் முறையாகும். ஆனால், புதிய உள்ளூராட்சி முறைமை வருகின்றபோது அதற்கான வாய்ப்பு ஏற்படலாம். எதிர்காலத்தில் இது சம்பந்தமாக தமிழ்த் தலைவர்களுடன் பேசி தீர்வுகளைக் காணமுடியும். அதற்கான வாய்ப்பைக் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கிறது.

கேள்வி: நாடளாவியரீதியில் அண்மைக் காலமாக முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு சில தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இத்தாக்குதல் சம்பவங்களைத் தடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஏதும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறதா?

பதில்: முஸ்லிம் காங்கிரஸ், தம்புள்ள பள்ளியிலிருந்து கடைசியாக தெஹிவளை, கடவத்தை பள்ளிவரை பலமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறான செயல்களுக்கு எதிராக நாம் அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளும் போராட்டமானது மிகவும் சக்திவாய்ந்தது. இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றிலிருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பனர்களை ஒன்று திரட்டி ஜனாதிபதி அவர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்ததன் விளைவாக ஓரளவுக்கு அவர் சட்டரீதியான நிவாரணத்தைக் கொடுப்பதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளார்.

அண்மையில் தெஹிவளையில் ஏற்பட்ட பள்ளி மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாகவும் முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து பாராளுமன்றத்தில் பிரதமரை சந்தித்து தெளிவுபடுத்தியுள்ளோம். பிரதமர் மத விவகார அமைச்சராக இருப்பதால் அவருடைய அமைச்சின் செயலாளர் மேற்கொள்கின்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை அவருக்கு விளக்கியிருக்கின்றோம். அதேபோன்று அமைச்சின் செயலாளர் எடுத்த எடுப்பலே பள்ளிவாசல்களை மூடுமாறு எழுதிய கடிதங்களை வாபஸ் பெறுமாறு கோரியிருக்கிறோம். அத்தோடு அவர் வழங்கிய கடிதத்தை பொலிஸார் எடுத்துக் கொண்டு பள்ளிவாசல்களுக்குச் செல்கின்ற நடவடிக்கைகளைநிறுத்துமாறும் கேட்டிருக்கிறோம். இதனை பிரதமர் ஏற்றிருக்கிறார்.

அத்தோடு எதிர்காலத்தில் பள்ளிவாசல் சம்பந்தமாக ஒரு கொள்கைரீதியான வகுப்பாக்கத்தை செய்வதற்கான ஒரு யோசனையை முன்வைப்பதற்கும் அதனை சட்டரீதியாக்குவதற்கும் கேட்டிருக்கிறார்கள். அந்த யோசனை என்னவென்றால், மூன்று அல்லது ஆறு மாதங்களாக இயங்கிவருகின்ற பள்ளிவாசல் மற்றும் மத்ரஸாக்களை பதிவு செய்வதாகும். அதற்கான சுற்று நிருபத்தை சகல நகரசபை, பிரதேச சபைகளுக்கும் அனுப்புவதற்கான யோசனையை கேட்டிருக்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் இந்த பள்ளிவாசல்கள் பதிவு சம்பந்தமாக முரண்பாடான நிலை காணப்படுகிறது. எனவே, அதனை மாற்றியமைத்து இனிமேல் உருவாக்கப்படுகின்ற பள்ளிவாசல்களை எவ்வாறு பதிவு செய்யலாம், அதற்கான அதிகாரத்தை கலாசார அமைச்சு கைக்கொள்ளாமல் வக்புசபையிடம் பாரம் கொடுப்பதற்கான வேண்டுகோளையும் விடுத்திருக்கிறோம். இவ்வாறு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைப் பெறுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் போராடி வருகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு அலா அஹமட்

# முஸ்லிம் பயணிகளைக் கவர்ந்துவரும் ஜப்பான் விமான நிலையம்



முஸ்லிம் பயணிகளை அதிகரிக்கும் நோக்கோடு ஜப்பான் சர்வதேச விமான நிலையத்தில் இவர்களுக்கான தொழுகை யறை மற்றும் ஹலால் உணவு போன்ற வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

முஸ்லிம் பயணிகளுக்கான நட்பான விமான நிலைய மாகவும் ஜப்பானில் 2020 இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காகவும் இதனை மாற்ற விரும்பு கிறோம் என நரிடா விமான நிலையத்தின் சமூக உறவுகள் காரியாலயம் தெரிவித்துள்ளது. முஸ் லிம்களுக்கு தொழுகை அறையுடன் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என மேலும் அது தெரிவித்துள்ளது.

அடுத்த வருடத்தினுள் பிரயாணிகளின் தேவையை கருத்திற்கொண்டு, பாவனை அதிக முள்ள இடங்களில் இரு தொழுகையறைகள் நிறுவப்படவுள்ளன.

2006 இல் கன்சி விமான நிலையத்தில் தொழுகையறை உருவாக்கப்பட்டது. அதே போல ஒசாகா விமான நிலையத்திலும் முஸ்லிம் நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கான வசதி களை ஏற்படுத்த முயன்று வருவதுடன், ஹன்ட் விமான நிலையத்தில் எதிர்வரும் மார்ச்சில் தொழுகை அறைகள் திறக்கப்படவுள்ளன. கடந்த வருடத்தில் 40% மலேசியா மற்றும் இந்தோனேசியா முஸ்லிம்கள் ஜப்பானுக்கு வருகை தந்ததாக தெரியவருகிறது.

1920 இன் பின் ரஷ்யாவிலிருந்து பல நூறு துருக்கிய முஸ்லிம்கள் ஜப்பானுக்கு சென்ற தால் இஸ்லாம் அங்கு அறிமுகமாகியது. 1980 களில் அங்கு முஸ்லிம்களின் சனத்தொகை ஈரான், பாகிஸ்தான், பங்களாதேஷ் தொழிலாளர்கள் புலம்பெயர்வு காரணமாக உயர்வை அடைந்தது.

# கானா முஸ்லிம்களின் கிறிஸ்மஸ் வாழ்த்து



கிறிஸ்தவர்களின் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு கானா விலுள்ள முஸ்லிம் அறிஞர்கள் வாழ்த்துக்களைத் தெரி வித்து ஏனைய சமூகத்துடனான தமது உறவினையும் பரஸ் பரத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

கிறிஸ்தவ சகோதர, சகோதரிகள் இந்த முக்கியமான நாளைக் கொண்டாடுகின்றனர். அல்லாஹ்வின் ஆசிர் வாதம் எம் அனைவர் மீதும் தொடர்ந்தும் இருக்க நான் பிரார்த்திக்கின்றேன். நாங்கள் ஒன்றாக ஒரு நாட்டில் பொது விதியின் அடிப்படையில் வாழ்கிறோம் என கானாவின் தேசிய இமாம்கள் நஹு சாருபுது தெரிவித்தார். எதிர் வரும் ஆண்டு சமாதானம், பாதுகாப்பு நிறைந்தவையாக அமைய மேலும் அவர் பிரார்த்தித்தார்.

நைஜீரிய முஸ்லிம்கள், மலாவி முஸ்லிம்கள் பலரும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# சகோதர அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அங்கீகரிக்க வேண்டும்

## ஐ.நா. விடம் எகிப்திய இராணுவ அரசு கோரிக்கை



எகிப்தின் இராணுவ அரசால் பதவி கவிழ்க்கப்பட்ட கலாநிதி முர்ஸியின் சகோதரத்துவ அமைப்பை பயங்கர வாத அமைப்பாக அங்கீகரிக்கும்படி ஐ.நா. மற்றும் சர்வதேச இன்ட போலிடம் எகிப்தின் இடைக்கால இராணுவ அரசு கோரிக்கை விடுத் துள்ளது.

கடந்தவாரம் இராணுவ அரசு சகோதரத்துவ அமைப்பை பயங்கர வாத அமைப்பாக அறிவித்துள்ள துடன் அதைத்தொடர்ந்து ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்ட பலரையும் கைதுசெய்து, அவ் அமைப்பின் மீது கடும் அடக்குமுறைகளையும் முடுக்கி விட்டது.

அண்மையில் எகிப்தின் நைல் டெல்டா நகரிலுள்ள பொலிஸ் தலைமை காரியாலயத்தில் கார் குண்டு வெடிப்பு ஏற்பட்டதில் 14 பேர் உயிரி ழந்ததுடன் 150 பேர் காயமடைந் தனர். இக்குண்டுத் தாக்குதலை சகோதர அமைப்புதான் செய்ததாக குற்றஞ்சாட்டிய இராணுவ அரசு, சகோதரத்துவ அமைப்பை பயங்கர வாத அமைப்பாக அறிவித்தது.

இராணுவ அரசின் இக்குற்றச் சாட்டை சகோதர அமைப்பு நிரா கரித்தது. எகிப்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை கடுமையாக கண்டிப்பதுடன், அரசு சகோதர அமை ப்பை தாக்குவதற்காக இதன்மீது குற் றம் சாட்டுவதாகவும் இக்குற்றச்சாட் டுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனவும் லண்டன் சகோதர அமைப் பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்புதிய அறிவித்தலின் நோக்கம் சகோதர அமைப்பின் செயற்பாடு களை இல்லாமல் செய்து, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து, அதன் ஆதரவாளர்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதுமேயாகும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் புரிவது, சகோதர அமைப்பின் சிந் தனைகளைப் பரப்புவது, ஆதரவு தெரி விப்பது போன்றவற்றிற்கு 5 வருட சிறைத்தண்டனை என இராணுவம் அதிரடியாக அறிவித்துள்ளது. இஃ வான் அமைப்பை பயங்கரவாத அமைப் பாக ஐ.நா. அங்கீகரித்தால், சர்வ தேசத்தில் அக்குழுவைச் சேர்ந்தோரை கைதுசெய்து சொத்துக்களையும் பறி முதல் செய்யமுடியும் என இராணுவ அரசு ஐ.நா. விடம் கூறியுள்ளது.

இராணுவ அரசின் இப்புதிய அறிவித்தலின் பின்னணியில் பல மேற்கு சக்திகள் தொழிற்படுவதா கவும் 1954 இன் பின்னர் வந்த அரசு கள் செய்த முதல் நடவடிக்கை யாகவும் இது கூறப்படுகிறது.

# அணுவாராய்ச்சிக்கான ஐரோப்பிய ஒன்றியத்தில் இஸ்ரேல் முழு அங்கத்தவராக இணைவு

அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய ஒன்றிய அமைப் பில் இஸ்ரேல் முழு அங்கத்தவராக இணைந்துள்ளது. 20 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப் பிய யூனியனில், இஸ்ரேலை முழு உறுப்பினராக சேர்ப் பதற்கான வாக்கெடுப்பு அண்மையில் நிறைவடைந் தது. இதன்மூலம் எதிர்வரும் 2 வருடகாலத்திற்கு இஸ்ரேல் முழு உறுப்பினராக இணைந்து செயற்படும்.

ஐரோப்பிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகள் இவ்வமைப்பில் இணைவது இதுவே முதல் முறை யாகும். இதன்விளைவாக இஸ்ரேலுக்கு பொருளாதார மற்றும் விஞ்ஞான அனுகூலங்கள் பல ஏற்பட வாய்ப் புண்டு. ஐரோப்பிய யூனியனின் இம்முடிவை இஸ் ரேலிய வெளிவிவகார அமைச்சர் வரவேற்றுள்ளார்.

# தென்சூடானில் தொடரும் மோதல் 1.2 இலட்சம் பேர் இடப்பெயர்வு





தென்சூடானின் அதிபர் சால்வர் கிருக்கு எதிராக தலைநகர் ஜுபாயில் தொடங்கிய கிளர்ச்சியில் இதுவரை 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர் உள் நாட்டிலேயே புலம்பெயர்ந்துள்ள தாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இராணுவத்தினருக்கும் முன்னாள் துணை அதிபர் ரிக் மாச்சரின் ஆதர வாளர்களுக்கும் இடையே இடம் பெற்ற இம்மோதலால் 1000 பேர் இறந்துள்ளனர்.

இந்த மோதலால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவுவதற்கு குறைந் தபட்சம் 166 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐ. நா. மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேசம்

# தெற்காசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய சக்திகள்



ஸகி பவுஸ் (நளீமி)

பங்களாதேஷின் மிகப் பெரும் ஊழல் பெருச்சாளியான ஷெய்க் ஹசீனாவின் மதச்சார்பற்ற அரசு, ஜமாஅத்தே இஸ்லாமியின் துணை பொதுச் செயலாளர் அப்துல் காதிர் முல்லாவை தூக்குமேடை ஏற்றிய நிகழ்வு யாவரும் அறிந்ததே. அச்சம்பவம் பங்களாதேஷத்தில் மாத்திரமன்றி முழு தெற்காசிய அரசியல் களத்திலும் பாரிய எதிர்வலைகளை ஏற்படுத்தியது. இன்னொரு நோக்கில் தெற்காசிய முஸ்லிம்களின் அரசியல், கலாசார மற்றும் பொருளாதார ரீதியான எதிர்காலத்திற்கு தெளிவான ஆப்புவைக்கும் ஏகாதிபத்திய ஏஜண்டுகளின் ஒரு கட்ட நகர்வாக அப்துல் காதிர் முல்லாவின் தூக்குமேடை சம்பவத்தைக் கருதலாம்.

எவ்வாறு முழு மத்திய கிழக்கிலும் அடிவருடி நாடுகளையும் இராணுவ சர்வதிகாரங்களையும் கூலிப்படையாக வைத்து இஸ்லாமியவாதிகளின் எழுச்சியை ஏகாதிபத்திய சக்திகள் அடக்குகின்றனவோ, அதேபோல தெற்காசியப் பிராந்தியத்திலும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்கள் தொழிற் படுகின்றன. அதனை இயக்குபவ்ர்களின் ஒரு நோக்கம் இஸ்லாத்தின் அரசியல் பரிமாணம் தெற்காசியப் பராந்தியத்தில் பரவக் கூடாது என்பது மட்டுமே.



இந்தியாவில் நடைபெற்ற குஜராத் படுகொலைகள், பாகிஸ்தானில் தொடரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் இராணுவ சர்வதிகார ஆட்கள் என்பன ஏகாதிபத்திய பொறியியலாளர்களின் தெளிவான திட்டங்களாகும். இந்தத் தொடரின் கடைசி அங்கந்தான் அப்துல் காதிர் முல்லாவுக்கு தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டமையும் பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி தடைசெய்யப்பட்டமையும்.

தெற்காசியாவின் அரசியல் மாற்றங்களை நிர்ணயிக்கும் பிரதான கதாபாத்திரங்களாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷம், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளையும் அரசுசாரா இயக்கங்களையும் கருதலாம். பரம 'எதிரிகளான பாகிஸ்தானும் இந்தியாவும் தெற்காசியாவின் அரசியல் ஆதிக்கத்தை தீர்மானிக்கும் மையப்புள்ளிகளாக தொழிற்பட்டு வருகின்றன. இந்த இரண்டு நாடுகளும் கடந்த 50 வருடத்திற்கும் மேல் கடும் பகைமை பாராட்டி வருகின்ற தேசங்கள். இதற்கான பின்னணி என்னவென்றால், ஒருமித்த தலைமைத்துவத்தின் கீழிருந்த இந்தியாவை பாகிஸ்தானின் தலைவர்கள் திட்டமிட்டுப் பிரித்தார்கள் என்பது மட்டுமே. அதாவது, ஒரு உபகண்டமாக கருதப்பட்ட இந்தியாவை முஸ்லிம்கள் மார்க்கத்தின் பெயரால் பங்களாதேஷம் மற்றும் பாகிஸ்தான் என்ற இரு நாடுகளாக பிரித்து விட்டார்கள் என இந்தியா கருதுகிறது. எப்போது பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்ததோ அன்று முதல் பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய முஸ்லிம் சமூகத்தை இந்தியா தனது புவி மற்றும் இராஜதந்திர நகர்வுகளுக்கு ஒரு சவாலாகவே நோக்குகிறது.

இங்குதான் ஏகாதிபத்தியத்தின் நிகழ்ச்சி நிரலுடன் இந்தியாவின் அரச புவியியல் நோக்கங்கள் ஒன்றுசேருகின்றன. சர்வதேச இஸ்லாமிய எழுச்சியை தலைமை தாங்கி நகர்த்தக் கூடிய ஐந்து நாடுகளில் சவூதி அரேபியா, எகிப்து, துருக்கி, ஈராக் போன்ற நாடுகளுடன் பாகிஸ்தானையும் சில சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் இணைத்து நோக்குகின்றனர். இஸ்லாத்திற்கு பலங்கொடுக்கும் மிகப் பெரும் தேசமாக மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடந்தான் பாகிஸ்தான் 1947 களில் உருவாக்கப்பட்டது. எனவே, பாகிஸ்தான் அரசியல் சுதந்திரம் பெற்ற தேசமாக இருந்தாலுங்கூட, அரசியல் ரீதியாக ஸ்திரத்தன்மையற்ற தேசமாக இருக்கவேண்டும் என்பதே ஏகாதிபத்தியசக்திகளின்கனவாகும். பாகிஸ்தான் மனித வளம், அணுவாயுதம் மற்றும் ஏனைய முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளுடன் கொண்டிருக்கும் நிலரீதியான தொடர்பு என்பவற்றையும் பயன்படுத்தி முழு தெற்காசிய பராந்தியத்திலும் இஸ்லாமிய



> 1971 ஆம் ஆண்டு அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் மறைமுக உதவியுடன் இந்தியா பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷை பிரித்தது.

எழுச்சியின் பரிமாணத்தை ஏற்படுத்தி விடுவார்கள் என ஏகாதிபத்தியம் பயப்படுகிறது. எனவே, ஏகாதிபத்தியமும் இந்தியாவும் பாகிஸ்தானை குட்டிச்சுவராக்க வேண்டும் என்பதில் கங்கணம் கட்டிச் செயற்பட ஆரம்பத்தன

1971 ஆம் ஆண்டு அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் மறைமுக உதவியுடன் இந்தியா பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷை பரித்தது. இவ்வாறு பாகிஸ்தான் இரு தேசங்களாக பிரிந்தமை தெற்காசிய இஸ்லாமிய எழுச்சியில் பாரிய எதிர் மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியது. காரணம், பங்களாதேஷ் 160 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட பூமி என்பதனாலாகும். இன்னும், பங்களாதேஷை பிரித்து விடுவதுடன் இந்தியா ஓய்ந்துவிடவில்லை. மாறாக இனி எப்போதும் பாகிஸ்தானுடன் இணைந்துவிடக் கூடாது என்பதற்காகவும் தனது நேரடி கட்டுப்பாட்டில் பங்களாதேஷை வைத்துக்கொள்ளும் நோக்குடனும் அது தொழிற்பட்டது. வங்காளத்தின்அரசியல்வாதிகள்தமதுசுயத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கான எவ்வித இடைவெளியையும் நியுடெல்லி விட்டு வைக்கவே இல்லை. இந்த வகையில் வங்காளத்தின் இஸ்லாமிய அடையாளத்தை சூறையாடும் இந்தியாவின் 30 வருட தொடர் சீரியல் நாடகத்தின் ஓரங்கந்தான் அப்துல் காதர் முல்லாவின் தூக்குமேடை.

பலபோது தெற்காசியாவின் முக்கிய அமைப்பான தலிபாண்களும் கூட இஸ்லாமிய எழுச்சிக்கு எதிரான விஷ அம்பாக பயன்படுத்தப்படுகிறார்கள். பாகிஸ்தானின் அரசியல் தீர்மானங்களை, அதன் இராஜதந்திர நகர்வுகளை குட்டிச்சுவராக்குவதில் தலிபான்கள் காத்திரமான பங்கை வகிக்கின்றனர். தலிபான்களும் பாகிஸ்தானின் அரசாங்கமும் ஒன்று சேர்ந்துவிடக் கூடாது என்பதில் தீர்க்கமாக அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது. அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா விமானங்கள் தலிபான்களின் .தலைவர்கள், அவர்கள் செல்வாக்குப் பெற்ற பிராந்தியங்களில் தாக்குதல்களை தொடுப்பதற்கு இதுவே மூலகாரணமாகும்.


இந்தத் தாக்குதல்கள் பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியுடந்தான் தொடுக்கப்படுகின்றன என தலிபான்கள் நினைக்கின்றனர். இதனால் பாகிஸ்தானின் பல முக்கிய நகரங்களை இலக்குவைத்து குண்டுத் தாக்குதல்களை தலிபான்கள் நடத்துகின்றனர். சமீபத்தில்கூட, பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஸ் ஷரீபன் அரசு தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அறிவித்தது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் கச்சிதமாகவே நடந்துமுடிந்தன. பேச்சுவார்த்தைக்கான தருணம் நெருங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் தலிபான்களின் முக்கிய தலைவர் ஒருவரை குண்டு வீசிக் கொலைசெய்தது. இதனைத் தொடர்ந்து தலிபான்கள் பேச்சுவார்த்தையை இரத்துச்செய்யும் அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்தன. பல ஆண்டுகளுக்குப் பிறகு இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தைகளும் வெறும் கனவுகளாகக் கரைந்து சென்றன.

பாகிஸ்தானை திட்டமிட்டு ஒடுக்கும் ஏகாதிபத்தியத்தின் இன்னொரு அரசியல் நாடகம் ஆப்கானிய அரசை மையப்

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய உலாவி (Web Browser)



நாம் இணையதளத்தில் பிரவேசிப்பதற்கான தலைவாயில் இந்த Web Browser தான். இணையதளத்தில் நுழைய நாம் பல்வேறு Web Browser களைப் பயன்படுத்துகிறோம். கூகுள் குரோம், மொசைலா பயர் பொக்ஸ், ஒபேரா, இன்டர்நெட் எக்ஸ்புளோரர், சபாரி போன்றவை அவ்வாறான சில புரோசர்களாகும். இணைய உலாவி என இதனை தமிழில் அழைப்பர். இணையத்தில் உலா வருதற்குப் பயன்படும் சாதனம் இதுவாகும்.

இணையத்தைப் பயன்படுத்த நாடும்போது அவற்றில் நாம் விரும்பும் ஒன்றை அல்லது வழமையாகப் பயன்படுத்தும் ஒன்றை கிளிக் செய்தால் உடனே இணையத்தில் பிரவேசிப்பதற்கான நுழைவாயில் தோன்றும். இது தான் இணைய உலாவி.

இந்த இணைய உலாவியில் சென்று எமக்குத் தேவையான இணையதளத்திற்குள் பிரவேசிக்கலாம். அல்லது தேவையான தகவல்களைத் தேடிப்பெறலாம். இதற்கு தேடல் இயந்திரங்கள் உதவுகின்றன. தேடல் இயந்திரங்கள் (Search Engines) தொடர்பான விபரங்களை நாம் ஏலவே பார்த்திருக்கிறோம்.

பொதுவாக தேடல் இயந்திரங்களை (Search Engines) உள்ளடக்கியதாகவே இந்த இணைய உலாவிகள் வடிவமைக்கப்பட்டிருக்கும். மேலும் தேடல் இயந்திரங்களுக்கான தெரிவுகளும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும். எமக்கு விரும்பிய தேடல் இயந்திரத்தினூடாக நாம் விரும்பும் விடயத்தை தேடிப்பெற இது உதவும்.

கூகுள் நிறுவனம், தேடல் பொறி மற்றும் இணைய உலாவி இரண்டையும் கொண்டுள்ளது. யாஹூ நிறுவனத்திடம் தேடல் பொறி மாத்திரமே உள்ளது. அதேபோல் அப்பிள் நிறுவனத்திடமும் தேடல் பொறி இல்லை. அவர்கள் சபாரி எனும் அவர்களது புரோசரில் ஏனைய தேடல் பொறிகளினூடாகவே தேடல் மேற்கொள்ளும் வசதியை வழங்குகின்றனர்.

இணைய தரவுகளைச் சுருக்கி வேகமாகத் தேடித்தரும் பொறியாக ஒபேரா புகழ்பெற்று விளங்குகின்றது. அப்பிள் பாவனையாளர்கள் அதனது தயாரிப்பான சபாரியையே பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு பலரும் அவரவர் தேவைக்கேற்ப இந்த இணைய உலாவியைத் தெரிவு செய்து பயன்டுத்துகின்றனர்.

### இணைய உலாவியின் பாதுகாப்பு

இணையத்தைப் பயன்படுத்தும்போது பல்வேறு மல்வெயார்கள் வந்து எமது கணினியைப் பாதிக்கலாம். இவற்றைக் கட்டுப்படுத்தும் வசதியையும் உள்ளடக்கியே இணைய உலாவிகள் வடிவமைக்கப்படுகின்றன. மிகவும் பாதுகாப்பான இணைய உலாவியாக Mozilla Firefox கருதப்படுகிறது. ஆனால் Internet Explorer தானே மிகவும் பாதுகாப்பான இணைய உலாவி என்று கூறிவருகிறது.

மிக விரைவான உலாவியாக குரோம் உள்ளபோதும் அதனை விட வேகமான உலாவியாக ஒபேரா பயன்படுத்தப்படுகிறது.

### சிறுவருக்கான இணைய உலாவி

**Kidzy**

இணையத்தைப் பயன்படுத்தும்போது அது அனைத்தையும் தேடித்தரும். எனவே, இதனை சிறுவர்கள் பயன்படுத்தும்போது தேவையற்ற விடயங்களைப் பார்க்க நேரிடுகிறது. இதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க இந்த இணைய உலாவி உதவுகிறது. மேலும் குறிப்பிட்ட நேர வரையறையிட்டு உங்கள் சிறார்களைப் பயன்படுத்தச் செய்யவும் இது துணைசெய்கிறது.

இந்த இணைய உலாவிகள் கணினிகளுக்கு வேறாகவும் மொபைல் போன்களுக்கு வேறாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

### இணைய உலாவியின் சிறப்பம்சங்கள்

**Multi Tab**

ஒரு நேரத்தில் பல இணையத்தளங்களை திறந்துவைப்பதற்கான வசதி இதுவாகும். இதன் மூலம் பல இணைய தளங்களை திறந்துவைத்துக் கொண்டு எமக்குப் பணியாற்ற முடியும்.

**History**

நாம் சென்ற இணையதளங்களின் விபரங்களை இதில் அறியலாம்.

**Extensions**

இந்த இணைய உலாவியில் மேலும் பல உள்ளீடுகளை இணைத்து சிறப்பாகச் செயற்படுத்தலாம்.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

## இவ்வார சிந்தனைக்கு

**மாற்றத்தைத் தவிர வேறெதுவும் நிலையானதல்ல**

**-ஹெரக்லியஸ்-**




# இயற்பியலுக்கு புதுவாசலைத் திறந்தவர் நீல்ஸ்போர்

எஸ்.எல். உஸ்மான் அகீல்



நீல்ஸ்போர் இளமைப் பருவத்திலேயே அறிவியலில் மிக்க நாட்டம் கொண்டவராக விளங்கினார். இயற்பியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர். 1900 ஆண்டுகளில் கல்லூரிகளில் ஆய்வு கூடங்கள் இல்லாத காரணத்தால், தனக்குத் தோன்றுவதை உடனுக்குடன் செய்துபார்த்து முடிவை அறிந்துகொள்ள முடியாத நிலையிலிருந்தார். ஆயினும், தனது தந்தை ஆய்வுக்காக தனியாக உருவாக்கி வைத்திருந்த ஆய்வுகூடம் இவருக்கு ஓரளவில் உதவியது. ஆய்வுகூடத்திலேயே பெரும் பொழுதைச் செலவிட்டார். இயற்பியல் மீதுள்ள ஆய்வு, இதுவே இவரின் வாழ்க்கையாயிற்று. 1906 இல் ஒரு மாபெரும் முடிவை அறிவியல் உலகுக்கு நீல்ஸ்போர் தந்தார். அதுதான் surface tension எனும் ஆய்வாகும். இயற்பியல் அகராதியில் முதன் முறையாக இந்தப் பதத்தை நுழையவைத்த வெற்றிகரமான ஆய்வுக்காக தனது தாய் நாடான டென்மார்க் தலைமை அறிவியல் கழகத்திடமிருந்து தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். அப்போது இவருக்கு வயது இருபதாகும்.

1911 இல் விஞ்ஞானா கலாநிதி பட்டத்தை பெற்றுக்கொண்டார். இங்கிலாந்தில் மான்செஸ்டர் விக்டோரியா பல்கலைக் கழகத்தில் இயற்பியல் அறிஞர் ரூதர் போர்டின் கொள்கைகளை அடிப்படையாக வைத்து அணுவின் அடிப்படை அமைப்புப் பற்றிய தன்னுடைய கோட்பாட்டை 1913 இல் வெளியிட்டார்.

"அணுவின் உட்கருவை எதிர்மின்னேற்றம் பெற்ற துகள்கள் (எலக்ட்ரோன்கள்) வட்டப் பாதைகளில் சுற்றிவருகின்றன. வெளிவட்டப் பாதையிலுள்ள எலக்ட்ரோன்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தனிமங்களின் வேதியியல் பண்புகள் அமைகின்றன" என்று கூறினார். கதிரியக்கம் மற்றும் எதிரியக்கத்தின் விகிதப் பொருட்களாக எலக்ட்ரோன்கள் உருவாகி வெளியேறுகின்றன என்பதை குவாண்டம் கொள்கையின் (Quantum Theory) அடிப்படைக் கருத்தையொட்டியதாக தனது விளக்கங்களை வெளியிட்டார். அவை ஓரணுவின் ஆக்கம் பற்றிய வழிகாட்டல்களாகவும் அமைந்தன.

அணுவைத் தரம்பிரித்தார். இதுதான் அணு என்றும் அது இப்படித்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் உலகுக்கு உணர்த்தினார். இவ்வரிய ஆய்வுக்காக 1922 இல் இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார். 1933-1942 வரையான காலப் பகுதிகளில் இயற்பியலின் கதிரியக்கம், எலக்ட்ரோன் வெளிப்பாடு தொடர்பாக இவர் எழுதிய 115 ஆய்வுக் கட்டுரைகள் இரு தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

அணுகுண்டு தயாரித்துத் தருமாறு இங்கிலாந்து வேண்டி நின்றது. இந்த வேண்டுகோளை ஏற்று முதலில் இங்கிலாந்திலேயே ஆராய்ச்சியைத் தொடங்கினார். பின்னர், அமெரிக்காவில் லாஸ் அலமோஸ் எனும் பகுதிக்கு தனது குழுவினருடன் சென்று ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்; அணுகுண்டு தயாரித்து வெற்றியும் பெற்றார்.

1950 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் தலைமையகத்துக்கு நீல்ஸ்போர் நீண்ட கடிதமொன்றை அனுப்பினார். அதிலே: எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் அணுகுண்டு மனித குலத்துக்கு எதிராகவோ, பூகோளத்திற்கு எதிராகவோ, போர் போன்ற அழிவுப் பணிகளுக்கோ பயன்படுத்தப்பட மாட்டாது என்ற பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டிருந்தது.

ஜப்பானில் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அமெரிக்கா அணுகுண்டைப் பயன்படுத்தியது. இச்சம்பவத்தைத் தவிர, நீல்ஸ் போரின் அமைதிக்கோரிக்கை இன்றுவரை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளமையைக் காண்கிறோம். ஐக்கிய நாடுகளின் அமைதிக்கான விருதையும் அவர் பெற்றுக் கொண்டார்.

# புவி வெப்பமடைதலால் மனிதனுக்கு ஏற்படும் இன்னுமொரு விளைவு

புவி வெப்பமடைதல் என்பது சர்வ தேச ரீதியாக பேசப்படும் ஒரு முக்கிய விடயமாகவுள்ளது. இந்த புவி வெப்பமடைதலின் விளைவாக பல்வேறு பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அன்றாடம் மரங்கள் வெட்டுதல், பாரிய கைத்தொழில் நிறுவனங்களின் கழிவுகள் மற்றும் அதில் வெளியிடப்படும் காபனீரொட்சைட் போன்றவற்றினால் புவி வெப்பமடைகின்றது. இதன் காரணமாக பூமியில் மனிதர்கள் வாழமுடியாத சூழ்நிலை ஏற்படக் கூடும் என விஞ்ஞானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

புவி வெப்பமடைதலின் காரணமாக கடலில் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனால் கடல்வாழ் உயிரினங்களின் மேல் இரசம் (Mercury) எனும் இரசாயனப் பதார்த்தம் படிவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிப்பதற்கு வாய்ப்பேற்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமான ஆய்வை மேற்கொண்ட ஜெனிபர் ஏ. டிஜ்ஸ்ரா (Jennifer A. Dijkstra) எனும் விஞ்ஞானி தலைமையிலான ஆய்வுக் குழு கண்டறிந்து உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வுக்குழுவினர் கிலி (Killi Fish) எனும் மீன் களில் மேற்கொண்ட ஆய்வொன்றில் இதனைக் கண்டறிந்துள்ளதாக பிலோஸ்வன் (Plos one) எனும் ஆய்வு சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடலிலுள்ள உயிரினங்களின் உடலின் மேல் இரசம் படிந்திருப்பது பற்றி இது வரையில் பெரிதும் அறிந்திருக்கப்படவில்லை. இவ்வாய்வுக்குழுவினர் ஆய்வு கூடத்திலும் அம்மீன்கள் வாழும் இயற்கை சூழலிலும் செய்த பரிசோதனையில், வெப்பநிலையின் அளவையும் அம்மீன்களின் மேல் படியும் இரசத்தின் அளவையும் பரி சோதித்தார்கள். வெப்பநிலை அதிகமாக உள்ள நீர் நிலைகளில் வாழும் மீன்கள் அதி களவு உணவை உட்கொண்டாலும் அதில் பெரிதளவு வளர்ச்சி காணப்படவில்லை. அத்தோடு அந்த மீன்களின் உடம்பின் சதைகளை (Tissue) எடுத்து ஆய்வுசெய்ததில் இரசம் அதிகளவு படிந்திருப்பதையும் ஆய்வாளர்கள் அறிந்துகொண்டார்கள். அத்தோடு தொழிற்சாலை கழிவுகளினால் வாயு மண்டலத்திற்கு வரும் இரசம் நீரில் மெதில் இரசமாக கலக்கப்படுகிறது. இந்த இரசமே மீனினத்தில் படிவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இரசம் மனித உடம்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மூலக்கூறாகும். இது மீன்களில் கலந்திருப்பதால் அதனை உட்கொள்வதன் மூலம் மனிதர்களுக்கு சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். குறிப்பாக புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு போன்ற பல்வேறு பாரிய நோய்கள் இரசம் படிந்த மீன்களை உட்கொள்வதன் மூலம் ஏற்படவாய்ப்பேற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களின் பொறுமையை இழக்கச்செய்யும் பெண்களின் செயல்கள்



உலகிலுள்ள அனைவருக்கும் சிலவற்றில் அதிகமான விருப்பங்கள் இருக்கும். அத்தகைய விருப்பங்களை அடைவதற்கு அதிக ஆர்வம் செலுத்துவதால் சில சமயங்களில் நம்முடன் பழகுபவர்களுக்கு அது பொறுமையை இழக்கச் செய்து எரிச்சலூட்டவும் கூடும்.

பெண்களுக்குப் பிடித்து ஆண்களுக்கு பிடிக்காத செயல்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் மேக்கப்போடுவது.

வெளியே கிளம்புவதற்கு 10-15 நிமிடங்கள் போதுமானவை. ஆனால், பெண்கள் குறைந்தது 1 மணிநேரத்தை எடுத்துக் கொள்வார்கள். இதனால் நீண்டநேரம் காத்திருப்பதால் ஆண்கள் வெறுப்படைந்து விடுவார்கள்.

பெண்களுக்கு இயற்கையாகவே அன்பு அதிகமிருக்கும். அதேநேரம், அழகின் மீதும் அதிக கவனம் செலுத்துவார்கள். அதனால்தான் அவர்கள் மேக்கப் செய்வதற்கு அதிகநேரம் எடுத்துக்கொள்கிறனர்.

அதிலும் கூந்தல் என்று வந்துவிட்டால் கூந்தலை எப்படியெல்லாம் ஸ்டைலாக சீவலாமோ அவை அனைத்தையும் முயற்சித்துப் பார்ப்பார்கள்.

பெண்கள் நேரத்திற்கு சாப்பிடுவதை ஆண்கள் எப்போதுமே விரும்புவார்கள். பெண்கள் நேரத்திற்கு சாப்படுவதில்லை, அவர்கள் வயிறுநிறைய சாப்படுவதும் குறைவு. சரியாக சாப்பிடாமல் இருந்தால் பின்சீன் போடுகிறார்கள் என்று நினைத்து ஆண்களுக்கு மனதில் ஒருவித எதிர்மறை எண்ணங்கள் உண்டாகும்.

பெண்களுக்கு எவ்வளவுதான் வீட்டில் துணிகள் இருந்தாலும் புது ஆடைகள் வாங்குவதிலுள்ள நாட்டம் குறையாது. வாங்கவேண்டும் என்று நினைத்துவிட்டால் எதனை வாங்கவேண்டும்? என்று யோசிக்கவே 30 நிமிடங்களை எடுத்துக் கொள்வார்கள். இந்தநேரம் மட்டும் ஆண்கள், பெண்கள் கைகளில் மாட்டிக் கொண்டால் பொறுமையை ஆடையாகத் தான் அணிந்திருக்க வேண்டும்.

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி



சிராஜுல் ஹஸன்

# பெண் உன்னதம்

மகள், மனைவி, தாய், தோழி என்ற வெவ்வேறு நிலைகளில் பெண்மையின் உன்னதம் உயர்வையும் மனநிம்மதியையும் அடைகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பெண்மையின் உன்னதம் இந்த நிலைகளை அடைவதில் அல்ல. ஒரு பெண்ணின் மனோபாவத்தைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது என்பதுதான் என் அபிப்பராயம்.

**சுயநலமற்ற நேசம்**

உள்ளார்ந்த அன்பு

தலைகோதி நெஞ்சின் சிடுக்கெடுக்கும் விரல் நுனிகள்

இதயம் உடைந்து விம்மும் வேளைகளில் ஆறுதல் பனித்துளிகள்

பிழைசெய்தால் அன்புகலந்த கண்டிப்பு

எப்போதும் எரிக்காத பார்வை

இவை ஒரு பெண்ணின் மனவெளியில் உலவும்வரை அவள் பெண்மையின் உன்னதம் வான்தொடும்.

நிம்மதியின் ஊற்றுக்கரை உடைக்கும் ஆண்-பெண் சமத்துவம் இன்று நிறமிழந்து பெண் தன் மனமிழந்து நிற்கிறாள்.

பெண்ணின் மென்மைகலந்த மேன்மை உயிர்சிலிர்க்கும்

பொத்தி வளர்க்கும் ஒரு மகளின் அலைபுரளும் பாசம்

உயிர்வேரில் ஓவியமாய் சிலிர்க்கும் மனைவியின் மென்காதல்

மனம் வலிக்கும் பொழுதுகளில் தலைதடவி தாலாட்டும் தாயின் நேசம்

தொடாத தூரத்திலிருந்தாலும் சுவாசத் துடிப்பறிந்த தோழியின் நட்பு

ஒவ்வொன்றுமே பெண்மையின் உன்னதந்தான்

பெண்ணின் மனோபாவமும் அன்பின் ஆளுகையுந்தான் அதனைத் தீர்மானிக்கும்.

# நீரிழிவும் சிறுநீரக செயலிழப்பும்



ஆரோக்கிய தேசம்

மனிதன் என்பவன் இறைவனின் அற்புதப் படைப்பு. அவனது ஒவ்வோர் உறுப்பும் அறிவுக்கு அப்பாற்பட்ட நுணுக்கமான கட்டமைப்புகளையும் தொழிற்பாடுகளையும் கொண்டது. அது ஒவ்வொன்றும் பாரிய தொழில்களைச் செய்யும் சிறிய தொழிற்சாலைபோல் தொழிற்படும்.

சிறுநீரகங்கள் மனித உடலிலுள்ள அற்புதத் தொழிற்சாலைகளில் ஒன்றாகும். இவை பல மில்லியன் சிறுநீரகத்தி (Nephron) அமைப்புகளைக் கொண்டவை.

இவ் ஒவ்வோர் அமைப்பும் எமது உடலில் ஓடிக்கொண்டிருக்கும் குருதியிலுள்ள கழிவுப் பொருட்களையும் மேலதிக நீரையும் வடித்து சிறுநீராக வெளியேற்றுகிறது. இவ்வாறு தினமும் 180 லீற்றர் வரையான குருதியை வடித்து சுமார் 1.5 - 2 லீற்றர் வரையான சிறுநீரை எம்முடலிருந்து வெளியேற்றுகிறது. நீரிழிவு நோயின் போது சிறுநீரகங்கள் பாதிப்படைவதால் உருவாகும் நோய் நிலைமைதான் Diabetic Nephropathy. இதன்போது நம் சிறுநீரகங்களின் கழிவகற்றும் தொழில் பாதிப்படைந்து சிறுநீர் உருவாகும் வீதம் குறைவடைகிறது. இறுதியாக சிறுநீரக செயலிழப்புக்கு வித்திடுகிறது.

நீரிழிவு என்பது இன்றைய காலத்தில் ஒரு சாதாரணநோயாக மாறிவிட்டது. எமது சமூகத்தில் அதிகமானவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதை காண்கிறோம். இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றுதான் எமது உணவு பழக்க வழக்கமும் உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறையுமாகும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்துவதற்கான சாத்தியம் மிகக் குறைவு அல்லது இல்லை. ஆனால், இந்நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், அதாவது எமது குருதியில் குளுக்கோசை 80100mg/dl என்றளவில் வைத்திருப்பதன் மூலம், சாதாரண வாழ்க்கையை நீரிழிவு நோயாளர்களால் வாழமுடியும்.

இக்கட்டுப்பாட்டை நோயாளிகள் கடைப்படிக்காத போது குருதியிலுள்ள அதிக குளுக்கோசானது மனிதனின் ஏனைய உறுப்புகளில் சிறுநீரக கான் மற்றும் நரம்புகளில் Diabetic Nephropoathy, Diabetic Neuropathy, Diabetic retinopathy போன்ற சிக்கலான நோய் நிலைமைகளை ஏற்படுத்தலாம். நீண்டகாலமாக கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயுடன் இருப்பவர்கள் இவ்வாறான நோய் நிலைமகளுக்கு ஆளாகும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும்.

சரி, இப்போது Diabetic Nephropoathy என்பது என்ன? எவ்வாறு உருவாகிறது? என்பதைப் பற்றி நோக்குவோம்.


நாம் முன்னர் கூறியதுபோல சிறுநீரகமானது சிறுநீரகத்திகள் எனும் எளிய அமைப்புகளை மையமாகவைத்து இயங்குகிறது. இவ்வொவ்வோர் அமைப்பும் குருதி மயிர்த்துளைக் குழாய்களைக் கொண்டது. எமது உடம்பிலுள்ள குருதியானது தன்னிடமுள்ள கழிவுகளை அகற்றுவதற்காக இந்த மயிர்த்துளைக் குழாய்களுக்கூடாகவே சிறுநீரகத்திகளுக்கு வருகிறது. எமது குருதியில் நீண்டகாலமாக குளுக்கோசு அதிகரித்து காணப்படும் போது இந்த அதிகரித்த குளுக்கோசு அதிலுள்ள கலங்களை பெருக்கமடையச் செய்து மயிர்த்துளைக் குழாயின் உள்ளிடத்தை (விட்டத்தை) குறைக்கிறது. இதனால் குருதி அதனூடாக செல்லும் அளவு குறைவடைகிறது. எனவே, எமது உடலின் கழிவகற்றல் செயற்பாடு பாதிப்படைகிறது. கழிவுகளும் நீரும் எமது உடலில் தேங்குகின்றன. பாதிக்கப்பட்ட மயிர்த்துளைக் குழாய்களினூடாக சாதரணமாக வடிக்கப்படாத புரதம் சிறுநீராக வெளிவருகிறது.

பொதுவாக இந்நோயின்போது சிறுநீரக நோயின் கடைசி நிலை End stage renal failure +2 வரை நோயாளியில் எந்த அறிகுறியும் தோன்றுவதில்லை. சிறுநீரக நோயின் கடைசி நிலையின்போது அலுப்பு, உடலில் அசௌகரியம், பசியின்மை, தலைவலி, தோல் உலர்தல், வாந்தி, கைகால் வீக்கம், உயர்குருதி அமுக்கம் போன்ற அறிகுறிகள் தென்படலாம்.

பொதுவாக, சாதாரண சுகதேகி மனிதனில் அல்புமின் (Albumin)என்ற புரதம் காணப்படுவதில்லை. சிறுநீரகத்தியில் ஏதாவது பாதிப்பு ஏற்படும் போதுதான் சிறுநீரில் இந்தப் புரதம் தோன்றுகிறது.

ஆரம்ப அறிகுறிகள் எதுவும் இல்லாததால் இதன் ஆரம்பநிலையைக் கண்டுபடிப்பது கடினம். பொதுவாக நீரிழிவு நோயாளர்களின் சிறுநீரக பரிசோதனையில் +2 microalbumin என்ற புரதம் அதிகளவில் காணப்படுவதை வைத்து இந் நிலைமை யூகிக்கப்படுகிறது. பின்னர், மேலதிகமாக Blood urea nitrogen, Creatinine clearance+2 போன்ற பரிசோதனைகளின் மூலம் இந்நோய் உறுதிசெய்யப் படலாம்.

DiabeticNephropoathy இனால் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்துவது கடினம். ஆனால், குருதி குளுக்கோசு, குருதி அமுத்தம் (+2) என்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் மற்றும் மருந்துகளை சரியாக உபபோகிப்பதன் மூலமும் சிறுநீரக செயலிழப்பை பிற்படுத்தலாம்.




எம்.என்.எம். சஹ்னாஸ்
BSc in MLS (Reading)
மாவனல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிவுப்...

(06ஆம் பக்கத் தொடர்)

இன்று வருடாந்தம் இரண்டாயிரம் மாணவர்கள் அளவில் பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றார்கள். இருந்தும் அரச பல்கலைக்கழகத்தில் எத்தனை முஸ்லிம் மாணவர்கள் இருக்கின்றார்கள், எந்தத் துறையில் அவர்கள் கற்கின்றார்கள், எப்பிரதேசத்திலிருந்து வருகின்றார்கள், அவர்களின் இடைவிலகல் மற்றும் எத்தனை பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் விரிவுரையாளர்கள் இருக்கின்றார்கள் என்பன போன்ற தரவுகளை அறியாத சமூகமாக நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

இக்காலப்பகுதியில் முஸ்லிம்கள் அறிவார்ந்த சமூகமாக மாறுவதற்கான இலக்கை தூர நோக்கு அடிப்படையில் வகுத்துக் கொள்ள வேண்டும்.

அறிவுப் பொருளாதார சமூகத்தை உருவாக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை நாமறிந்து அதில் பங்காளர்களாக ஆகவேண்டும். முஸ்லிம்களின் கல்விநிலை தொடர்பான தகவல்களை நாம் திரட்ட வேண்டும். முஸ்லிம் தலைவர்களின் சிந்தனைகளை உள்வாங்கி துறைசார் அறிவியலாளர்களை உருவாக்குவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபடவேண்டும். பல்கலைக்கழக கல்வியுடன் மென்திறன் பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும்.



## தெற்காசிய...

(13 ஆம் பக்கத் தொடர்)

அதாவது, அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்குப் பிந்திய ஆப்கானில் அரசியல்ரீதியாக இரண்டு அம்சங்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன. ஆப்கானில் வளர்ந்து வரும் பாகிஸ்தான் எதிர்ப்புவாதம். மற்றையது ஆப்கானில் அதிகரிக்கும் இந்தியாவின் பொருளாதார, அரசியல், கல்விசார் செல்வாக்கு. சர்வதேச ஏகாதிபத்தியமும் இந்தியாவும் இணைந்து எவ்வாறு பாகிஸ்தானின் எழுச்சியை முடக்குவதற்கும் இஸ்லாமியவாதிகளின் சமூகப் பிரசன்னத்தை தடுப்பதற்கும் பங்களாதேஷை கருவியாக பயன்படுத்தி வருகின்றதோ, அதே பாணியில் இன்னொரு வங்காளத்தை இந்தியாவும் ஏகாதிபத்தியமும் இணைந்து ஆப்கானில் உருவாக்கி வருகின்றன. தற்போதைய ஹமீத் கர்ஸாயின் அரசு அயல் நாடான பாகிஸ்தானை விட இந்தியாவுக்கு மிகவும் விசுவாசமாக இருக்கும் நிலைதான் காணப்படுகிறது. அதனை விட அபாயகரமான விடயம் 2014 இல் அமெரிக்க இராணுவம் ஆப்கானிலிருந்து வெளியாகும்போது, ஆப்கானை முழுமையாக இந்தியாவின் செல்வாக்கின் கீழ் விட்டுச் செல்வதற்கு தீர்மானித்துள்ளமையாகும்.

இந்தியாவின் அதிகரித்த செல்வாக்கின் விளைவுகளை ஆப்கானில் தெளிவாகவே காணலாம். குறிப்பாக, ஆப்கானிய அரசு பாகிஸ்தானை தனது இறைமைக்கு சவால் விடுக்கும் நாடாக நோக்குகின்ற நிலை அதற்கான சிறந்த சான்றாகும். இன்னும், ஆப்கானின் 6000 மாணவர்களுக்கு இந்தியா வருடாந்தம் தமது மேற்படிப்பை தொடர்வதற்காக புலமைப்பரிசில்களை வழங்குகின்றன. ஆப்கானின் தற்போதைய பிரதமர் ஹமீத் கர்ஸாயிகூட இந்தியப் பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி என்பதும் நோக்கத்தக்கது. ஆப்கானின் அனைத்து மீள்கட்டுமாணப் பணிகளில் இந்தியாவும் பங்காளி என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு விடயமாகும். மொத்தத்தில் ஆப்கான், வங்காளம் என்ற இரு முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளை விட்டும் பாகிஸ்தானை தனிமைப்படுத்துவதே இந்தியாவினதும் ஏகாதிபத்திய வலைபின்னலினதும் இறுதி இலக்காகும்.

சர்வதேச இஸ்லாமிய எழுச்சியின் தெற்காசியப் பரிமாணத்தை வடிவமைக்கக் கூடிய தேசங்களாக பாகிஸ்தானும் பங்களாதேஷும் ஆப்கானும் ஏகாதிபத்தியத்தால் கருதப்படுவதனால்தான், இந்தியாவை வைத்து ஏகாதிபத்திய சக்திகள் மேற்குறிப்பிட்ட தேசங்களை அடக்குகின்றன. இந்தியா வங்காளத்தையும் ஆப்கானையும் கட்டுப்படுத்துவதினூடாக பாகிஸ்தானை சுற்றிவளைக்கும் அதேவேளை, அமெரிக்கா தலிபான்களை வைத்து பாகிஸ்தானை சுற்றிவளைக்கின்றது. பாகிஸ்தானை மையப்படுத்தி திட்டப்பட்டிருக்கும் இச்சுற்றிவளைப்பு திட்டத்தை அரசியல் அவதானிகள் மென்சக்தியைக் கொண்டு எதிரியை சுற்றிவளைக்கும் இராஜதந்திரம் என அழைக்கின்றனர். இந்தவகையில் இஸ்லாமிய எழுச்சிக்கு எதிரான சர்வதேச வலைப்பின்னலின் ஓரங்கந்தான் தெற்காசியாவில் அரங்கேறுகிறது.



(03 ஆம் பக்கத் தொடர்)

## முஸ்லிம்களுக்குள்...

தென்மாகாண கல்வியமைச்சர் சந்திமா பீ. ராசபுத்ர தெரிவித்தார்.

விசேடமாக முஸ்லிம் மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குச் செல்லும்போது அவர்கள் நடனத்தை இடைநிறுத்துகிறார்கள். இருந்தாலும் அவர்கள் கீழ் வகுப்புகளில் மகிழ்ச்சியாக அதைச் செய்கிறார்கள். என்றாலும் உங்கள் கலாசாரத்தை எந்தவொரு வகையிலும் மாற்றியமைக்குமாறு நான் ஒருபோதும் சொல்லமாட்டேன்.

மாணவர்களுக்கு கற்பதற்கான சூழலை அமைத்துக்கொடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இல்லாவிட்டால் அவர்கள் கல்வியில் கரிசனை காட்டமாட்டார்கள். உங்களுக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அவற்றை தயவுசெய்து பிள்ளைகளின் முன்னிலையில் காட்ட வேண்டாம். விசேடமாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தவேண்டாம். அவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் பற்றி பிள்ளைகளுக்கு எதுவும் தெரியாது. பிறகு அவர்களும் அவ்வாறே தொடர்ந்தும் செயற்பட முற்படுவார்கள். ஈற்றில் பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்.

பிளவுகளின்றி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமாயின் கல்வித்துறையில் இதைவிட பாரிய முன்னேற்றத்தைக் காணலாம். பாடசாலையில் பிளவுகள் தோன்றினால் நிச்சயம் கல்வித்துறையில் அது பாரிய தாக்கத்தைச் செலுத்தும்.

முஸ்லிம்கள் சக்திமிக்கவர்கள். பிரச்சினைகள், பிளவுகள் என்பது முஸ்லிம்கள் மத்தியில் அதிகம் தோன்றுவதில்லை. உங்களுக்குள் பிளவுகளை உருவாக்கிக் கொண்டால் ஏற்படுகின்ற பின்விளைவுகள் மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

பாடசாலையினுள் அரசியல் செய்ய வேண்டாம். தேசிய கொள்கைக்காக மட்டுமே உங்கள் ஆதரவை வழங்குங்கள். நாட்டை சீரான பாதையில் கொண்டு செல்ல உங்கள் பங்களிப்பை நல்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

அதிபர் எம்.ஏ.எஸ். ஸனூலா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென் மாகாண தமிழ்மொழி பிரதி கல்விப் பணிப்பாளர் மதனிய்யா கலீல், மாத்தறை வலய கல்விப் பணிப்பாளர் ஆர்.கே. நாணயக்கார, வெலிகம நகரபிதா ஹுஸைன் ஹாஜியார் முகம்மது ஆகியோரும் உரையாற்றினர்.

## பணக்காரர்...

முன் பக்கத் தொடர்

24 லட்சம் கோடி டொலர் சொத்துக்களுடன் ஐக்கிய அரபு நாடுகளின் மன்னரான ஷேக் கலிபா பின் சையது அல்நஹ்யான் பிடித்துள்ளார்.

சவூதி மன்னர் அப்துல்லா பின் அப்துல் அஸீஸ் 21 லட்சம் கோடி டொலருடன் மூன்றாவதுவது இடத்திலுள்ளார். கடந்த ஆண்டு முதலிடத்தை பிடித்த புரூணை சுல்தான் இந்தாண்டு 20 லட்சம் கோடி டொலருடன் நான்காவது இடத்துக்கு கீழிறங்கியுள்ளார். ஐந்தாவது இடத்தை 18 லட்சம் கோடி டொலர் சொத்துக்களுடன் துபாய் துணை அதிபரும் பிரதமருமான ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் பிடித்துள்ளார்.

கத்தார் மன்னர் ஷேக் ஹமத் பின் கலிபா அல்தானி ஏழாவது இடத்திலும் ஓமான் மன்னர் சுல்தான் கப்பூஸ்பின் பத்தாவது இடத்தையும் பிடித்துள்ளனர். இங்கிலாந்து ராணி இரண்டாவது எலிசபெத் பன்னிரெண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்த பணக்கார மன்னர்களின் மொத்த சொத்து 128 லட்சம் கோடி டொலர்களாகும்.

## இசைக்கச்சேரிகளில்...

முன் பக்கத் தொடர்

முக்காடுகளுடனும் நமது முஸ்லிம் பெண்கள் பலர் சென்றிருந்தனர். அதன் புகைப்படங்கள் சமூக வலயதளங்களில் உலாவவிடப்பட்டன.

பேரினவாதிகளிலும் சில இனவாத சக்திகள் மட்டுமே முஸ்லிம் பெண்களின் கலாசார உடைகளுக்கு எதிராக குரல்கொடுக்கின்றனர். ஆனால், அதிகமான சிங்கள மக்கள் இந்த ஒழுக்கமான ஆடைக் கலாசாரத்திற்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் அளித்துப் பேசுகின்றனர். பாராளுமன்றத்தில் கூட நமது பெண்களின் ஆடைக் கலாசாரத்துக்கு சாதகமாக சிங்கள அமைச்சர்கள் பலரும் குரல் கொடுத்திருக்கின்றனர்.

முஸ்லிம் பெண்கள் அமைதியானவர்கள், ஒழுக்கமானவர்கள், தனித்துவமான கலாசாரத்தை பேணுகின்ற இவர்கள், இது போன்ற களியாட்டங்களை அறவே விரும்பாதவர்கள் என்ற உணர்வை அந்நிய சமூகத்தவர் மத்தியில் உதாரணமாக காட்ட வேண்டிய நாம், இப்படி பொறுப்பற்ற தனத்துடன் நடந்துகொள்வது எமது கலாசாரத்துக்கு நாமே தேடிக்கொள்ளும் வினையாகத்தான் வந்துசேரும்.

## உள்ளூராட்சிமன்ற...

முன் பக்கத் தொடர்

உள்வாங்கி முஸ்லிம் சமூகத்துக்குப் பாதகமற்ற நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம். அமீன் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரல் ஒன்றின் கீழ் இவ்விவகாரம் முன்னெடுக்கப்படுவதால், இதுகுறித்து அக்கறையிருப்பது முஸ்லிம்களை அரசியல் பிரதிநிதித்துவரீதியில் காலாகாலமாக பாதிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லை மீள்நிர்ணய விவகாரம் குறித்த மீளாய்வுக் கூட்டங்களில் தமது கருத்துக்களை முன்வைப்பதில் முஸ்லிம் பிரதேச சபை உறுப்பினர்கள் பராமுகமாக இருந்துவிட்டதாகவும் அதுகுறித்த பூரண தெளிவை கொண்டிருக்கவில்லை எனவும் குற்றந்தான் சுமத்தப்படுகின்றன.

இவ்விவகாரம் தொடர்பில் தன்னாலான முழு முயற்சியையும் முஸ்லிம் சமூகம் சார்ந்து செய்துள்ளதாகத் தெரிவிக்கும் எல்லை நிர்ணயக்குழு உறுப்பினர் ஏ.எம். நஹியா நீடிக்கப்பட்டுள்ள மூன்று மாதகால அவகாசத்தை காத்திரமாகப் பயன்படுத்த சம்மந்தப்பட்ட தரப்புகள் முன்வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

அமைச்சர் அதாவுல்லா இது விடயத்தில் அதிக கரிசனை காட்டவேண்டும் என சிவில் சமூகப் பிரதிநிதிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கட்டைக் காற்சட்டை...

முன் பக்கத் தொடர்

யுவதிகளின் தற்கால அரைகுறை ஆடைகளை கட்டுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதை விடுத்து, முஸ்லிம் பெண்களின் ஹபாயாக்கள் குறித்து பேசுபவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

மடவளையில் இடம்பெற்ற 'அலைகள்' காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழாவில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## யுத்தக் கணக்கெடுப்பு...

முன் பக்கத் தொடர்

யுத்த பாதிப்புகள் தொடர்பில் கணக்கெடுப்பொன்று அவசியமானதே. அதை அரசாங்கம் கட்டாயமாக செய்யவேண்டும். ஆனால், தற்போது புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பில் எவ்விதமான வெளிப்படைத் தன்மைகளுமில்லை.

கணக்கெடுப்பு தொடர்பில் கொடுக்கப்படும் பத்திரத்தை புள்ளிவிபரவியல் திணைக்கள அதிகாரிகளே நிரப்புவதாகவும் பொதுமக்களின் உண்மை விபரங்களை கருத்தில் கொள்ளப்படவில்லை எனவும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதேபோல் இப்புள்ளிவிபரவியல் கணக்கெடுப்பை எவராவது தனிப்பட்ட தேவைகளுக்காகவா அல்லது சர்வதேசத்தின் அழுத்தங்களை சமாளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்குள்ளது என மேலும் அவர் தெரிவித்தார்.

## மையவாடிக் காணியில்...

முன் பக்கத் தொடர்

மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடிக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை தனியார் நிறுவம் ஒன்று பிரதேசத்தின் உள்ளூராட்சி சபையின் ஆதரவுடன் ஆக்கிரமித்துள்ளது எனத் தெரிவித்து பிரதேச முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில், 'மையவாடிக் காணியில் மதுபானச் சாலையா' போன்ற சுலோக அட்டைகள் ஏந்தப்பட்டிருந்தன.

சுமார் 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கொழும்பு மாளிகாவத்தை மையவாடிக் காணி சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இளஞ்செழியன்...

(09 ஆம் பக்கத் தொடர்)

தருனம் பார்த்திருந்த அரசு அவரையும் கைதுசெய்து சிறையில் அடைத்தது. இ.தி.மு.க. வை தீவிரவாத இயக்கமாக முத்திரை குத்தியது. அதன் ஆதரவாளர்களும் தொண்டர்களும் சிதறி ஓடினர். அத்தோடு இ.தி.மு.க. வின் கதையும் மட்டுமல்ல, இளஞ்செழியனின் அரசியல் வாழ்க்கையும் முடிவுக்கு வந்தன. அவருக்கு ஆதரவு வழங்கிய தமிழரசுக் கட்சியும் மௌனம் காத்தது.

இது அறுபதுகளில் நடைபெற்று எழுபதுகளின் ஆரம்பத்தில் முடிவுக்கு வந்த மற்றொரு தமிழர்களின் உரிமை போராட்ட வரலாறு. இப்போது திரும்பிநின்று பார்க்கும்போது சிறந்த செயற்பாட்டாளரும் பேச்சாளரும் அப்பலுக்கற்ற வருமான ஓர் அரசியல்வாதி செய்த தவறினால் மிகப்பெரும் வாய்ப்பொன்று தமிழர்களிடமிருந்து நழுவிப்போன சோகக் கதை இது. இழஞ்செழியன் தன் தீவிரப் போக்கை குறைத்து, நிதானப்போக்கை கடைப்பிடித்து எஸ்.ஜே.வி. யுடன் கைகோர்த்து முன்னேறிச் சென்றிருந்தால்,

பின்னர் நிகழ்ந்த பல அழிவுகளையும் அவலங்களையும் உயிர்ப்பலிகளையும் தவிர்த்திருக்கலாம்.

அது என்னவோ தெரியவில்லை, சிறுபான்மையினருக்கான வாய்ப்புகள் தவறிப் போய்க் கொண்டே இருக்கின்றன. பாதை மேலும் கடினமாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

(சென்ற இதழின் தொடர்)

இந்தப் பாடலில் 'கண்மணி கதிசா' என்னும் இடத்தில் அவரவர் பிள்ளைகளின் பெயர்களை இட்டுப் பாடலைப் பாடுவர். பெண் பிள்ளையொன்றிற்கு விளையாட்டுக் காட்டி அதனை உறங்கச் செய்யும் தாயொருத்தி, அப்பிள்ளையின் எதிர்கால வாழ்வைப் பற்றியும் சிந்தித்து விடுகிறாள்.

எப்படித்தான் முத்தாலான மோதிரம் போட்டுச்சீராட்டிப்பாராட்டி வளர்த்தாலும் ஒரு நாளில் திருமணம் முடித்து வைக்க வேண்டும். திருமணம் என்றாலே, சீதனந்தானே பெருஞ்சவாலாக வந்து நிற்கும். அதில் வெறுப்புக்கொள்ளும் மனோபாங்கினை பாடலொன்றில் காண்போம்:

*சப்பாணியம் புள்ள சப்பாணி*
*சாந்துக்கையால சப்பாணி*
*முத்து மோதிரக் கையால*
*மொளங்கிக் கொட்டுமாம் சப்பாணி*

*சப்பாணி கொட்டுற பிள்ளக்கி*
*எப்ப வருவாராம் மாப்பிள்ள*
*மாப்பிள்ள தோப்புள்ள*
*மண்ணாங்கட்டி மாப்பிள்ள*
*நாலுபணங் காசிக்கு*
*நாணயங்கெட்ட மாப்பிள்ள*

இப்பாடலில் சீதனம் வாங்கும் மாப்பிள்ளைமார்களிடம் கடுமையான வெறுப்பை, 'மண்ணாங்கட்டி மாப்பிள்ள', 'நாணயங்கெட்ட மாப்பிள்ள' என்ற தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

மற்றுமொரு பெண்பிள்ளைத் தாலாட்டை பாடித்தான் பார்ப்போம்:

*ஆராரோ ஆராரோ*
*ஆரும்மஞ்சிக் கப்பால*
*ஆராம்பூத் தொட்டிலில*
*அருமை மகள் நித்திர செய்*
*தாயார் பகைத்து*
*தனித்திருந்து வந்த மகள்- என்*
*தங்க மகளே நீ*
*தாழ்மையுடன் நித்திரை செய்*

தங்கமகள் என குழந்தையை விளித்து,



தாழ்மைக் குணம் பெண்களுக்கு அவசியம் எனப் புத்திபுகட்டும் விதமாகப் பாடல் அமைந்திருப்பது பிரதேச பண்பாட்டினை பறைசாற்றி நிற்கின்றது.

இந்த ஊரிலே 'சப்பாணி' என்றொருவன் இருந்தான். அவனைக் காட்டி பிள்ளைகளைப் பயமுறுத்தி தூங்கச் செய்வர். ஆனால், குழந்தையோ 'சப்பாணியை' நினைத்துத் தூங்காமல் அழுது புலம்புகிறது. அருகிலே இருந்த மூதாட்டி, 'சப்பாணி' என்பதை இருபொருள் அமையப் பாடுகிறாள். ஒரு சப்பாணி கை கொட்டுவதையும் மற்றையது நொண்டித்திரியும் மனிதனான சப்பாணியையும் குறித்து நிற்கிறது. பின்வரும் பாடலைப் பாருங்கள்:

*சாப்பாணியாம் புள்ள சப்பாணி*
*சாந்துக் கையால சப்பாணி*
*முத்து மோதிரக் கையால*
*மொளங்கிக் கொட்டுமாம் சப்பாணி*

*சப்பாணி சண்டக்கி போகயுமொண்ணா*
*சாகிற கிழவியக் கொல்லயுமொண்ணா*
*நக்கங்கா புளியங்கா பொறக்கப்போய்*
*நக்கிண உழுந்தானாம் சப்பாணி*

புளிய மரத்திலிருந்து விழுந்த சப்பாணி இந்தப் பக்கம் வரவேமாட்டான். எனவே, நீ கைகொட்டி விளையாடிவிட்டுத் தூங்கலாம் என்பது மூதாட்டியின் வாதமாகும்.

## சுனாமி...

(5 ஆம் பக்கத் தொடர்)

நூலகம் போன்ற பல உட்கட்டுமான வசதிகளைக் கொண்டிருக்கிறது. இருப்பினும் இவ்வீடுகள் யாருக்கும் பயன்படாமல் பாழடைந்து கிடக்கின்றன. இதற்கு சில அரசியல்வாதிகளின் சுயநல முன்னெடுப்பும் இனவாத சிந்தனைகளுமே காரணமாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மக்களுக்கென்று இந்த நுரைச்சோலை வீட்டுத்திட்டம் 2005 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. தீகவாபியிருந்து 1 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இந்த நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தில் சிங்கள மக்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, இவ்வீடுகள் யாருக்கும் கையளிக்கப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென்று கட்டப்பட்ட இவ்வீடுகளில் இதில் பாதிக்கப்படாத தீகவாபி சிங்கள மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என கோருவதை நியாயிக்க முடியாத விடயமாக இருந்தாலும் உயர் நீதிமன்றம் இனரீதியான அடிப்படையில் இவ்வீடுகள் வழங்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. இருப்பினும் இத்தீர்ப்புக் கூட இன்னும் அமுல்படுத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியதாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மக்களுக்கு நுரைச்சோலை வீட்டுத்திட்டம், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற கதையாகும்.

இம்மக்கள் ஒவ்வொரு வருடமும் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என தமது உரிமைக்கான சாத்வீகப் போராட்டங்களை நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி குடியேறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்விடயம் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால நிலை குறித்து அச்சப்பட வேண்டியுள்ளது.

முஸ்லிம் சமூகத்துக்காக குரல் எழுப்புவோம் என்று கூப்பாடு போடும் எமது அரசியல்வாதிகள் இன்னும் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். கட்டிய வீட்டைக்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் பெற்றுக்கொடுக்க இல்லையென்றால் இந்த அரசியல்வாதிகள் மக்களுக்காக வேறெதனைச் செய்யப்போகிறார்கள்.

அதேபோன்று சாய்ந்தமருதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் அடிப்படை வசதிகள்கூட இன்னும் நிறைவு செய்யப்படாத நிலையில் தற்போதுதான் அதற்கான திட்டங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல கல்முனை, மருதமுனை பிரதேசங்களிலும் சுனாமி வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல இன்னல்களை அனுபவித்தவர்கள். அவர்கள் தமது பிரச்சினைகளிலிருந்து வெளிவர வேண்டும். அதற்கு அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். ஒன்பது வருடங்கள் கடந்தும் அம்மக்களுக்கான வசதிகளை செய்து கொடுக்காமலிருப்பது அவர்களுக்கு சுமைகளை இன்னும் அதிகப்படுத்தும் செயலாகும். இவற்றை கவனத்திலெடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

# புருணையில் சில நாட்கள்...

தொடர்-17

——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com



ஒரு ஊருல ஒரு அரசன் இருந்தானாம். அவனுக்கு மூணு பொண்டாட்டியும் 12 புள்ளைகளுமாம். ஒரு நாள் அவனது நாட்டிலுள்ள எல்லா மக்களையும் தனது வீட்டுக்கு அழைத்து சாப்பாடு போட்டானாம்...

குழந்தைகளை தூங்கவைக்க சொல்லும் இப்படியான ராஜா - ராணிக் கதைகளெல்லாம் உண்மையாக இருந்தால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும் என்று சில போது சிந்திப்பதுண்டு.

மனைவி, பிள்ளைகள் எல்லாம் ஓகே. நாட்டு மக்களையே கூப்பிட்டு சாப்பாடு கொடுப்பதென்றால் கற்பனைதான் செய்ய முடியுமா? புருணைக்கு சென்ற பின்னர்தான் கதைகள்கூட நிஜமாகலாம் என்ற உண்மை தெரிந்தது.

எனக்குள் ஏதோ பூரிப்பு! அந்த இரவு அவ்வளவு அவசரமாக விடிந்துவிடவில்லை. ஒரு நாட்டு அரசனின் அழைப்பை ஏற்று அவரிடம் விருந்துக்கு செல்கிறோம் என்றால் யாருக்குத்தான் பூரிப்பிருக்காது?

எமது வழமையான ஆடையை அணியாமல் புருணையில் பாரம்பரிய குர்தாவையும் துருக்கித் தொப்பி அமைப்பிலான தொப்பியையும் அணிந்துகொண்டோம்.

சரி, கொஞ்சம் நில்லுங்கள். புருணை மன்னர் என்ன அடிப்படையில் உங்களை அழைத்தார் என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

நீங்க வேற, அவர் என்னை மட்டுமா அழைத்தார்? நாட்டு மக்கள் அனைவருக்கும் விடுத்த பொதுவான அழைப்பு அது. அன்று மட்டும் முடிவடைந்து விட்ட அழைப்பு மல்ல. ஒவ்வொரு வருட நோன்புப் பெருநாளை அடுத்து வரும் மூன்று தினங்களுக்கு 'இஸ்தானா நூருல் ஈமான்' என அழைக்கப்படும் மன்னரின் மாளிகைக் கதவுகள் திறந்திருக்கும். அந்த மூன்று நாட்களும் பொதுமக்கள் அனைவரும் அங்கு சென்று மன்னரை சந்தித்து முகமுன் கூறி, கைலாகு கொடுக்கலாம்.

வெறுமனே கைலாகு கொடுத்துவிட்டு வருவது மட்டுமல்ல. செல்கின்ற அனைவருக்கும் வகை வகையான சாப்பாடு வயிறாரக் காத்திருக்கும். எந்த சாப்பாட்டையும் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுவதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

சலசலப்பு சந்தடி இல்லாமல் முழு நாடுமே வந்து சாப்பிட்டுவிட்டு செல்லும் காட்சியைப் பார்த்த எனக்கு நம்நாட்டு அலரிமாளிகை இப்தாரில் கறிச்சட்டியைக் கவிழ்த்துவிட்ட காட்சி வெட்கத்தைத் தந்தது.

சாப்பாடு மட்டுமல்ல, வகை வகையான இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படுவதுடன் வருகை தரும் அனைவருக்கும் சுல்தானின் வாழ்த்து அட்டையும் பெருநாள் பரிசும் வழங்கப்படும். சிறுவர்களுக்கு 5 டொலர் புருணைக் காசும் கிடைக்கும்.



சுல்தானுக்கு கைலாகு கொடுக்கும்போது அவரது, சகோதரர்கள் மகள்மார் அனைவரும் கூடவே இருப்பார்கள். மறுபக்கத்தில் பெண்கள் பட்டத்து ராணிக்கும் இளவரசிக்கும் சலாம் கொடுப்பார்கள்.

இவ்வருடம் சுல்தானை சந்தித்த மொத்த தொகையினரில் 52000 ஆவது நபராக நானிருந்தேன். நானும் சிஹானும் புருணை நண்பர் ஹஸ்மியும் அங்கு சென்றிருந்தோம்...

என்று கூறி முடித்த இஸ்மத் அலியிடம், நான் ஒரு வாரம் தாமதமாகி புருணை சென்றது குறித்து கவலைப்பட்டேன்.

கவலையை விடுங்கள், நாளைக்குத்தான் ஒப்பன் ஹவுஸிற்கு போகப்போகிறோமே. ஒபன் ஹவுஸா, அப்படியென்றால்? ஆ... திறந்த வீடு; கொஞ்சம் பொறுங்க...

-தொடரும்-

## ஜெனீவா...

(7 ஆம் பக்கத் தொடர்)

தமிழ்நாடு செய்வது சரியா, பிழையா என்பதை விட, தமிழ்நாடு என்பது இந்தியாவின் ஒரு பகுதி. அந்த மக்களின் விருப்பு வெறுப்புளுக்கு இந்திய மத்திய அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்பதை இலங்கையும் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. இந்திய மத்திய அரசுடனான இலங்கையுறவில் ஏற்பட்டுள்ள கீறலே இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகும். இலங்கையில் வட மாகாணசபையுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினை, இந்தியா - இலங்கை உறவில் ஏற்பட்ட சரிவு, இலங்கை எதிர்கொண்டுள்ள மனித உரிமை மீறல் பிரச்சினை மற்றும் மேலை நாடுகளில் தமிழ் டயஸ்போரா கொண்டுள்ள செல்வாக்கு போன்ற அனைத்தும் இடியப்பச் சிக்கலாக இலங்கையை கசக்கிப் பிழிவதைக் காண முடிகிறது. இந்தியாவினால் இப்பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும். அவ்வாறு செய்ய இலங்கை இந்தியாவுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். எப்படிப் பார்த்தாலும் பந்து இப்போது இலங்கையிடமேயுள்ளது. அதை எப்படி அடிப்பது என்பதையும் இலங்கையே தீர்மானிக்க வேண்டும். வெற்றி இலக்கை நோக்கி அடிக்கும் வாய்ப்பு நிறையவேயுள்ளது.

ஜே. ஆர். ஜயவர்தன ஆட்சிக்காலத்தில் அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலக் முதலி அமெரிக்க - இஸ்ரேல் உறவிலும் உதவியிலும் நம்பிக்கை வைத்து இந்தியாவை அலட்சியம் செய்தார். ஆனால், இலங்கையின் ஆகாயப் பரப்பில் அத்துமீறி இந்தியா உணவுப் பொட்டலங்களை போட்டபோது அதனை எந்த நாடும் கண்டுகொள்ளவே இல்லை. இன்றுவரை ஒரு நாடுகூட் இந்தியாவிடம் அதுபற்றிக் கேட்கவில்லை. ஈற்றில் இந்தியாவிடம் மண்டியிட வேண்டிய நிலையேற்பட்டது.

தீர்க்கமான ஒரு தேர்தலை எதிர்கொண்டு இந்தியக் காங்கிரஸ் அரசாங்கம் இலங்கை, தமிழ்நாடு என்பதில் தமிழ்நாட்டின் விருப்பு வெறுப்பையே தெரிவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷியும் இலங்கைக்கு பலமான எச்சரிக்கையைத்தான் விடுத்தார். குறைந்தபட்சம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசு பற்றி பச்சைக்கொடி காட்டும் நிலையையாவது உருவாக்காவிட்டால் வருந்தக்கூடிய விளைவுகளை இலங்கை சந்திக்கவேண்டி இருக்கும் என்றே கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெழுகுதிரியான்

மாதா மாதம் கை நிறைய ஊதியத்துடன் வந்த வாப்பாவின் நிலை வெறுங்கையானது. வீட்டின் வாழ்க்கைச் செலவும் படுபாதாளத்தில் போய்க்கொண்டிருந்தது.

வாப்பாவின் வேதனையை அவனால் தாங்கிக்க முடியாமல் போகவே பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி உழைப்பில் ஈடுபட்டான். நண்பனொருவனின் ஜவுளிக் கடையில் இரண்டு மாதங்கள் இருந்தான். மிகக் குறைந்த வேதனம், அதற்கும் முற்றுப்புள்ளி.

நெருங்கிய உறவினர் ஒருவர் நடைபாதை வியாபாரம் செய்யுமாறு கூறி அதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுத்தார். ஆறேழு மாதங்களாக கையில் ஓரளவு பணப்புழக்கம்... பொலிஸாரின் கெடுபிடிகள், காடையர்களின் அட்டகாசங்களால் அதற்கும் முளுக்குப்போட வேண்டியேற்பட்டது.

பின்னர், புத்தளம் நகரிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரொருவர் மூலம் ஹஜ்ஜாஜிகளுக்காக சில முன்னேற்பாடுகளைச் செய்ய மக்காவுக்கு இலவசமாகச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. சுற்றுலாப் பயணிகளின் வீஸா 3 மாதகால அனுமதியுடன் மக்காவுக்குள் நுழைந்தான்.

ஹஜ்ஜாஜிகளுக்கான முன்னேற்பாடுகள் யாவும் முடிவடைய, மீண்டும் நாட்டுக்கு திரும்பவேண்டுமெனப் பணித்த முகவர் அவன் செய்த வேலைக்குரிய கொடுப்பனவுகளையும் கொடுத்துவிட்டு, நாளை மறுநாள் பயணத்திற்குத் தயாராக இருக்குமாறு வேண்டினார்.

அவனுக்கு சிந்தனை தொற்றியது. வீட்டின் நிலைமை, ஊர் சென்றால் புதிதாக தொழில் ஒன்றைத் தேடிக்கொள்ள வேண்டும். கையில் முதலில்லை. அதனால் முகவருக்குத் தெரியாமல் மக்காவில் கிராமப்பகுதியொன்றுக்குப் பாய்ந்திட வேண்டும்; இதுதான் அவன் எடுத்த முடிவு.

இரு மாதங்களில் கற்றுக்கொண்ட அரபுமொழியைக் கொண்டு டாக்சி ஒன்றின் மூலம் கிராமப் பகுதியொன்றிற்குச் சென்று இறங்கினான். அங்கு ஒரு வேலையையும் தேடிக்கொண்டான்.

4 வருடங்களையும் தாண்டிவிட்டன. புனித ஹஜ்ஜுக் காலம் வந்தால்தான் அதிக வேலைகள் இருக்கும். குர்பானி கொடுப்பதற்காக அதிகளவிலான ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்கு முகவர்கள் வருவார்கள். இந்த சீசன் முடிவுற்றதும் கணிசமான அளவு ஊதியமும் கிடைத்தது.

அவன் வீட்டுக்கு அனுப்பிய பணத்தைக்கொண்டு மூத்த சகோதரியை திருமணம் செய்துவைத்தார்கள். இளைய சகோதரிக்கும் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்துவைக்கும் நிலையில் இருப்பதாக செய்தி வந்தது. சென்ற ஹஜ்ஜுப் பெருநாள் முடிந்து இரண்டாம் நாளில்தான் அந்தத் திருமணமும் நடைபெற்றது. இவனது உழைப்பால் இப்போது வீட்டில் எல்லோரும் சந்தோஷம்...

கடைசித் தங்கையையும் எப்படியும் கரைசேர்த்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் வாப்பா இருக்கும்போதுதான் அவரது துக்கரமான செய்தி கிடைத்தது. என்ன செய்யலாம்? வந்த வேலை முடியவில்லை. மனதை திடப்படுத்திக் கொண்டான் அவன். தாயகத்திலிருந்து வந்து பத்து வருடங்களாகின்றன. அந்த ஆட்டுப்பண்ணை உரிமையாளனிடம் அகப்பட்டால் சொந்த நாட்டிற்கு இலகுவில் அனுப்பவேமாட்டானாம்.

அவனுடன் வேலைசெய்யும் மற்றய மூன்று இலங்கையர்களுக்கும் 14, 15 வருடங்களாகின்றதாம். அடுத்த ஹஜ்ஜு சீசன் முடிந்த பின்னர்தான் றோஸானை தாயகம் அனுப்புவதாகச் சொல்லியிருக்கானாம் அந்த அரேபியன்.

அவனுக்குத் தெரியுமாம், இவர்களை விட்டால் புதிய ஆட்களை எடுப்பது கஷ்டம். தனது வருமானத்திலும் வீழ்ச்சியேற்படும் என்ற எண்ணமாம். இப்படியே மொத்தமாக 15 வருடங்களைக் கடத்திவிட்டான். இப்போது அவனது கடமை முடிவடையும் நேரம். கடைசித் தங்கைக்கும் திருமணம் நடைபெற்றது.

24 வயதில் வந்தவனுக்கு இப்போது 40 வயது. முதன் முதலில் மக்காவுக்குள் காலடியெடுத்து வைத்தபோது அழகான உடற் கட்டோடிருந்தவன், ஓயாமல் உழைத்ததினால் தேய்ந்து போயிருந்தான்.

40 வயதைத் தாண்டிய பின், எந்தப் பெண்ணின் கனவிலும் கல்லெறிய அவன் விரும்பவில்லை. மற்றைய இலங்கையர் மூவரும் தாயகம் சென்றுவிட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக புதியவர்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

சிறு தைக்கா ஒன்றில் தினமும் தொழுதுகொள்வான். இஷாவுக்குச் சென்றால் அதிக நேரமெடுக்கும். தன் குடும்ப நலன்களை வேண்டி துவாப் பிரார்த்தனையில் ஈடுபடுவதே அவனது வழக்கமாகும்.

அவனது அறிவுறுத்தல்களாலும் உதவியாலும் கடைசித் தம்பியும் இன்று பட்டதாரியாகிவிட்டான். அவனுக்கு ஓரளவு நிம்மதி. வாப்பா செய்யவேண்டிய கடமைகள் அத்தனையும் அல்லாஹ்வின் உதவியால் செய்துமுடித்ததை எண்ணும்போது ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவனுக்கு.

இப்போதெல்லாம் அவன் சோர்வுற்றிருந்தான். மன அழுத்தம் இருந்ததைக் காட்டிலும் கூடிச்சென்றது. முன்னரைப்போல் திருப்தியாக ஆட்டு மந்தைகளைப் பார்க்க முடியாமலிருந்தது. இந்நிலையில்தான் அன்று சுப்ஹுத் தொழுகை முடித்து தன் அறைக்கு வந்த அவனை பண்ணை உரிமையாளர் வந்து சந்தித்தார்.

"இனி நீ உன் ஊருக்குப் போகலாம். நாளை மறுநாள் இரவு உனக்கு பிளைட். எல்லா ஒழுங்குகளும் செய்துவிட்டேன்" என்றுவிட்டுப் போனான்.

இச்செய்தி திகீரென்றிருந்தது. 16 வருடங்களின் பின் இப்போது அவன் தாயகம் திரும்பப் போகிறேன். வீடு சென்றுதான் என்ன செய்வது? தொழிலும் செய்ய முடியாது, திருமணமும் கிடைக்காது. மன அழுத்தம் இன்னுமதிகரித்தது.

தொழுகையெல்லாம் முடிந்து எப்போதும் போல் துவாப் பிரார்த்தனையில் ஈடுபட்டான்.

"யா அல்லாஹ்! என்னைப் பொறுத்தவரையில் எந்தப் பாவமான காரியங்களிலும் ஈடுபடவேயில்லை. வாப்பாவின் நிலையினால் என் குடும்பம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே இங்கு வந்தேன். யா அல்லாஹ்! உன்னருளால் குடும்பச் சுமைகளையெல்லாம் தீர்க்க வழிவகுத்தாய். மற்றவர்களுக்குப் பிரகாசத்தைக் கொடுக்க தன்னையே உருக்கி அழிந்துபோகும் மெழுகுதிரிபோல நானும் ஆயினேன் யா அல்லாஹ்! அடி மெழுகுதிரியாக பிரகாசித்த என்னை முற்றாகவே அணைவதுபோல் அணைத்திடு"

என்றவாறு மல்லாந்து படுத்தான் அவன். தன் மார்பின் மீது இடதுகையை வைத்து அதன்மேல் வலதுகையை வைத்து தக்பீர் கட்டினான். லாஇலாஹ இல்லல்லாஹு என்று மூன்று தடவைகள் மொழிந்தான்.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்...

**எம்.எம். அலி அக்பர் - கிண்ணியா**

சிறு குறிப்பு




## மௌலவியா ஹிதாயா இப்றாஹீமின் பாலருக்கான இரு நூல்கள்

**நவீன முறையில் கணிதம் கற்போம்**

நமது நாட்டின் கலைத்திட்டத்தில் க.பொ.த. சாதாரண தேர்வுக்கு கணிதம் கட்டாய பாடமாகும். இப்பரீட்சையில், கணித பாடத்தில் சித்தியடைந்தால் மட்டுமே உயர்தர வகுப்புகளில் கல்வியைத் தொடரமுடியும். ஆனால் கணித பாடத்தில் நம் மாணவர்களின் சித்திவீதம் திருப்தி கரமானதாக இல்லை. பதினொரு வருடங்கள் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த மாணவர்களில் ஏறத்தாள அரைவாசியினர் கணித பாடத்தில் சித்தியடையாமையால் உயர்தரப் பிரிவில் கல்விகற்கும் வாய்ப்பை இழக்கின்றனர். இவ்வாறு பெருந்தொகையானோர் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாமைக்கு பிரதான காரணம், அவர்கள் ஆரம்ப வகுப்புகளில் அடிப்படையான கணித அறிவைப் பெற்றிராமையே என ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கணித அறிவானது ஒன்றிலிருந்து ஒன்றாகக் கட்டியெழுப்பப்படுவதால் ஆரம்ப அறிவு மிகவும் அவசியமானதாகும்.

இப்பின்னணியில் புதிய, புதிய ஆக்கங்களும் வழிகாட்டிகளும் அவசியமாகின்றன. நவீன முறையில் கணிதம் கற்போம் என்னும் இந்த வெளியீடு இத்துறையில் ஒரு வரப்பிரசாதமாகும்.

சிறுவர் விரும்பிச் செயற்படும் வகையிலான செயற்பாடுகளும் வர்ணத்துடனமைந்த கணிதத்துக்கான உருக்களும் மாணவர்களைக் கவரும் தன்மையில் அமைந்துள்ளன. இது மாணவர்க்கும் ஆசிரியருக்கும் மட்டுமன்றி வழிகாட்ட விளையும் பெற்றோருக்கும் மனமகிழ்ச்சியைத் தரும் எனலாம்.

நவீன முறையில் கணிதம் கற்போம் என்ற செயற்பாட்டு வழிகாட்டி நூலின் ஆசிரியர் மௌலவியா ஹிதாயா இப்றாஹீம் அவர்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக பாலர் பாடசாலையொன்றை நடத்தி நல்லனுபவம் பெற்றவர். சிறுவர், சிறுமியர் மனப்போக்குகளையும் எண்ணங்கள், தேவைகளையும் நன்குணர்ந்தவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித்திட்ட தராதரப்பத்திர வகுப்பில் பயிற்சி பெற்றவர். ஆற்றல் வாய்ந்த இவ்வாசிரியர் இலகுவாகக் கற்பதற்கான வழிகாட்டி நூல்களை முன்னரும் வெளியிட்டவர். ஆசிரியரின் கணிதம் கற்போம் எனும் இந்நூல் பயன்தரும் ஒன்றாகும். ஆசிரியரின் இந்த முயற்சி பாராட்டத்தக்கது. இவர் மேலும் பல நூல்களை வெளியிட வாழ்த்துக்கள்.

**மொழி எண்ணக்கரு விருத்திக்கான வழி**

மொழி எண்ணக் கருவின் விருத்தி பட வாசிப்பிலிருந்து ஆரம்பமாகிறது. வீட்டுச் சூழலில் உள்வாங்கிய பேச்சு மொழிக்கான 'வா' வடிவத்தை வகுப் பறைகளில் பெறுகின்றனர். இவ்வாறு வழங்கப்படும் வரி வடிவ அனுபவங்கள் ஆரோக்கியமாக, மகிழ்ச்சிகரமாக, பிள்ளை நேயச் செயற்பாடாக இருப்பது முக்கியம். அந்தவகையில் மௌலவியா ஹிதாயா இப்றாஹீம் அவர்கள் ஆரம்ப மொழி எண்ணக் கரு கற்றல், கற்பித்தலுக்கு உதவும் ஒரு நூலை தயார் செய்திருப்பது விரும்பத்தக்கதாகும். வீட்டுச் சூழலிலும் பாடசாலைச் சூழலிலும் தொடர்ந்து வழங்கப்படும் பயிற்சிகளே மொழி எண்ணக் கரு விருத்தியின் அடிப்படையாக அமையும். இந்நூலிலுள்ள பொருத்தமான பயிற்சிகளை பிள்ளைகள் செய்து பார்க்க உதவி செய்வதன் மூலம் பெற்றோரும் ஆசிரியரும் இதில் பங்களிப்புச் செய்யலாம்.

தொடர்புகளுக்கு:
0771998165, 077480212,
0776242470

## கடன்பட்டு...

(03 ஆம் பக்கத் தொடர்)

நாடு, மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் மாட்டியிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு 40,000 ரூபா இல்லாது வாழ முடியாத நிலை இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில் பெருந்தொகைப் பணம் கடனாகப் பெறப்பட்டு மோசடி செய்யப்படுகிறது. இது பொதுமக்களின் தலையில் சுமையாக இறங்கியுள்ளது.

1948 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை 1.8 திரில்யன் ரூபா மட்டுமே கடன் பெறப்பட்டது. எனினும் தற்போது 6.8 திரில்லியன் ரூபா கடன் பெறப்பட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் மாத்திரம் 3 திரில்லியன் ரூபா கடன் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சாப்பாட்டுக் கனவு



கொளத்து மீன்
வாங்கியம்பியில்
கொச்சிகா மொளகு
மஞ்சலரைத்து
கொழம்பாக்கிச் சோறுதின்ன
கொள்ளதான் ஆச இப்போ
வளவு காணி
வித்தாலும் ஏலா
களத்திப் போடுகா புள்ள
ஒன்ட கனகால ஆசயத்தான்

நாலு ரூபாக்
கொருகோர்வ
நனியான் கொளத்து விரால்
காலும் கையும்
கடுக்கறுத்துக்காரி
கடஞ்ச மாங்காவும்
கெழங்கும்
புளியூறத் திண்டகாலம் உம்மா
போனதோட போச்சுதுகா

ஆனவெல குதிரவெல மீனாம்
ஆக்கொண்ணா கெருத்திகூட
ஊனமுற்றாப் போலுருப்படி
ஆனமே ருசியில்லா
ஆறேழுநாள் பொணம்

ஏனோ செக்கும் செத்தகாலம்
பழய
சனங்க செத்ததோட
செத்ததுகா எம்
சாப்பாட்டின் வசந்த காலம்

-கலைதாசன் ஹக்கீம்-



# உயிர் மொழி

ஜமீல்

தெருமுனைச் சந்தியில்
யாரோ வெட்டியெறிந்த
மருதாணி இலைகளை உருவி அரைது
சிறுமியின் கரங்களில் பூசினேன்
மருதாணி சிவக்கும் முன்பே
புத்தாடை வாங்கிக்கேட்டு
அழுது சிவந்தாள் சிறுமி
சிறுமிக்கு தெரிந்ததெல்லாம்
மருதாணி பூசி சிவந்துவிட்டால்
பெருநாள் என்பது மட்டுந்தான்!
நாலைந்து தினங்களாய்
அடுப்பங்கரையில் பூனை படுப்பது
சிறுமிக்கு எங்கனம் புரியும்
யார் வீட்டுக் குப்பையோ
என் குடிசையில் எரிகிறது

## சிறுமியை அழவைத்த மருதாணி

# நான் நானாகவே

ஒரு
கற்பனைக்குள்
என்னைத் தீட்டி
அந்த ஓவியத்தோடு
பார்த்துவிடாதே
நான்
நான்தான்
உன் வரைதலுக்குள்
சிலவேளை
நான் வராமலே
இருக்கலாம்

ஈமான் சுமந்த
உன் உள்ளத்துக்குள்
எனக்கென ஓரிடங்கொடு
அந்த நேசத்துள்
நான் நானாகவே
வருகை தருகிறேன்

ஸபானா சுலைஹப்


# மாயை

பட்டங்களில்
மோகம் பிடித்துள்ள
மக்களின் காதுகளில்
புகழாரம் மேனியில்
தென்றல் துளியாய்
சிலிர்க்கிறது

கடலின் நுரைத்
துளிகள் மேல்
ஈர்ப்புக் கொண்டவர்கள்
பூமிப் பந்தில்
நடனமாடுகிறார்கள்

காற்றின் அசைவினால்
ஆலோலம் பாடும்
பகட்டர்கள்...
மனிதர் கூட்டத்தில்
ரீங்காரம் இடுகிறார்கள்

ஓ...
மானிடனைப் பார்த்து
நிதர்சனம் கேட்கிறது...
என் குரல் மாத்திரம்
உனக்கு காத தூரத்தில்தான்
கேட்கிறதோ?
கானல் நீர்
உனை ஏமாற்றும்,
நிதர்சனம்
உனைக் காக்கும்



ஏ. முஹம்மத் பாயிஸ்



# வட்டி

வண்டிலுண்டு
மாடு வேண்டும்
வட்டிக்குப்
பணமெடுத்தேன்
வண்டிலோடு மாட்டையும்
விற்றேன்
வட்டியைத்
திருப்பிக்கொடுக்க

மீரா எம். அஸ்ஹர்



# கடல் சீற்றம்

மருதமுனை சஜீத்

உம்மா... வாப்பா...
எங்கும் ஒரே மரண ஓலம்
ஊரே சுடுகாடாகியது சில
விநாடிகளில்!
சுபஹில்லாமல் தூங்கிய
ஜப்பாரும்
இரவெல்லாம் கும்மாளமிட்ட
நிஸ்ரியும்
ஜடலமாகக் கிடந்தார்கள்
கடல் வானத்தின் காலடியில்...

# ஹாதிமுல் உலமா



றியாழ் மௌலவி மரணம்!
குறுஞ் செய்திகள்
குவிந்துகொண்டிருந்தன
கூடவே சோகமும்
அப்பிக்கொண்டது

அவர் ஆன்மீகவாதி
அணிசார்ந்து அராஜகம் புரியாத
அதிகாரத்திற்கு அடிபணியாத
அரசியலுக்குள் அடிவைக்காத
ஆன்மீகவாதி ஆகவே,
அனுதாப அபிமான அறிவித்தலே
ஐயம் தெளிந்தேன்

அவரிடம் ஒரு பை (பேக்)
அதற்குள் எதுவுமிருக்காது
ஜம்இய்யாவின்
லெட்டர் ஹெட், சீல்
அதற்குரிய ஆவணங்கள் தவிர

எப்படித்தான் செய்து முடித்தார்?
நம்ப முடியவில்லை

வீஐபீக்கள் புத்திஜீவிகள்
ஆலிம்கள் கல்விமான்கள்
துறைசார் நிபுணர்கள்
பெருங்கூட்டம்
அவர் ஜனாஸாவில்

இத்தனைக்கும் அவர்
என்னதான் செய்தார்

அவர் நோயின் பிடியில்
நான் கொண்ட காதலால்
ஹாதிமுல் உலமா
பட்டமளித்து
வாளும் நாளில்
வாழ்த்தலாமே என
மன்னார் மாவட்ட உலமாசபையில்
மூன்று ஆண்டுகளுக்கு முன்
முன்மொழிந்தேன் தீர்மானமொன்றை
விட்டார்களா

அவர்கள்
நீலிக் கண்ணீர் வடித்ததை
ஜனாஸாவில் கண்டேன்
அதற்காய் இன்றும்
வேதனையில் துடிக்கிறேன்

ஹாதிமுல் உலமா
உலமாக்கள் ஊழியனே!

வல்லவன் உம்மை
பொருந்திக் கொள்ளட்டும்
சுவனத்து வாடையை
மண்ணறையில் நிரப்பட்டும்
மறுமையில் அவனது சுவனம்
அனந்தரமாய் கிடைக்கட்டும்

நீங்கள் நபியின் வாரிசு
களங்கமில்லாத
கபடமில்லாத வாரிசு

கலாபூஷணம் அகத்திமுறிப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகளில் நபியவர்களின் புகைப்படம் ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்துகிறது மீடியாபோரம்

அலுவலக நிருபர் -

அண்மைக்காலமாக இலங்கை அச்சு ஊடகங்களில் முஹம்மது நபியவர்கள் தொடர்பான செய்திப்பிரசுரங்களும் அவர்களைசித்தரித்துப் போடப்படும் புகைப்படங்களும் முஸ்லிம்களின் மனங்களை புண்படுத்தி வருகின்றன. எனவே, நாட்டிலுள்ள அனைத்து பத்திரிகை ஆசிரியர்களையும் அழைத்து இதுகுறித்து தெளிவுபடுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

SLMMF

அதேவேளை குறித்த புகைப்படங்கள் கூகுள் தேடுதளத்தில் இருந்தே தரவிறக்கம் செய்து பிரசுரிக்கப்படுவதால் முஹம்மது நபியின் பெயரிலுள்ள குறித்த அப்புகைப்படங்களை கூகுள் தேடுதளத்தில் இருந்து நீக்குமாறு கூகுள் நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டுவர உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தவாரம் திவயின சிங்களப் பத்திரிகை முஹம்மத் நபி எனக் குறிப்பிட்டு புகைப்படம் ஒன்றை வெளியிட்டிருந்தது. இது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிழப்பியதை அடுத்து குறித்த பிரசுரத்துக்கு திவயின பத்திரிகை பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தது.

முஹம்மது நபி அவர்கள் பற்றிய பூரண தெளிவில்லாததினாலேயே இவ்வாறான தவறுகள் இடம்பெறுவதால் அனைத்துப் பத்திரிகை ஆசிரியர்களையும் அழைத்து இதுகுறித்து தெளிபடுத்தவுள்ளதாக என்.எம். அமீன் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கையில் ஊடகங்கள் வேண்டுமென்றே ஈடுபடுவதில்லை எனத் தெரிவித்த அவர், இச்சந்தர்ப்பங்களில் சமூகம் உணர்ச்சிவசப்படாமல் நாகரிகமான முறையில் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாட்டிறைச்சிக் கடைகளுக்கு ஆப்பு சட்டரீதியாக தடுக்கும் பணி தொடங்கிவிட்டதா?

ஹரிஸ்பத்துவ பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கு 2014 ஆம் ஆண்டில் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹரிஸ்பத்துவ பிரதேசசபைப் பிரிவு சிங்கள மக்கள் அதிகம் வாழும் பிரதேசமாகும். இங்கு மாட்டிறைச்சிக் கடைகள் இருப்பது பௌத்த மதத்தை அவமதிப்பதாக கூறி, 2014 ஆம் ஆண்டிலிருந்து மாட்டிறைச்சிக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஹரிஸ்பத்துவ பிரதேச சபையிலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தவிசாளர் ஆனந்த ஜயவிலால் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் தனுஷ்க மல்வௌ முன்மொழிந்த இப்பிரேரணையை அதே கட்சியைச் சேர்ந்த சஞ்ஜீவ குருந்துவத்த வழிமொழிந்ததை அடுத்து இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பொதுபலசேனாவுக்கு வந்த அடுத்த சந்தேகம் மஹிந்தவா, சம்பந்தனா?

බොදු බල සේනා

நாட்டை ஆள்வது மஹிந்த ராஜ பக்ஷவா இல்லை சம்பந்தனா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொதுபலசேனா, பௌத்த மக்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு இருந்தும் கூட்டமைப்பை நாடுவது ஏன்? என கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் இன்று ஏயை மதத்தவரின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் தீவிரவாதிகள் தமது இனத்தவரை பரப்பிக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் கிறிஸ்தவர்கள் பிரிவினை சக்தியாக உருவாகி வருகின்றனர். இந்து பிரிவினைவாதமும் தலைதூக்குகிறது. இவ்வாறான பிற மதத்தவரின் ஆதிக்கங்களை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் எனவும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்று கூட்டமைப்பின் பேச்சே அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளைவிடவும் சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோரின் கருத்துக்களே அதிகமாக பேசப்படுகின்றன. எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆஸாதிடம் அதிகாரம் இருக்கும்வரை ஜெனீவா பேச்சுவார்த்தை வெற்றியளிக்காது


## -பிரான்ஸ் அதிபர்-



சிரிய அதிபர் ஆஸாதிடம் தொடர்ந்தும் அதிகாரம் இருக்கும்பட்சத்தில் ஜெனீவா ii பேச்சுவார்த்தை வெற்றியளிக்காது என பிரான்ஸ் அதிபர் பிரான்ஸ்சைஸ் ஹொலண்ட தெரிவித்துள்ளார்.

சிரியா தொடர்பான ஜெனீவா ii பேச்சுவார்த்தை ஆஸாதுக்கு அதிகாரத்தை வலியுறுத்துவதுடன் இது ஆஸாதிடமிருந்து மீண்டும் அவருக்கே அரசியல் மாறுதலை ஏற்படுத்த முனைகிறது. இதேநேரம் சிரியாவின் இன்றைய நிலை மிகக் கவலைக்கிடமாகவும் பாரதூரமாகவும் உள்ளன என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் லோறன்ட் பேவியஸ், ஜெனீவா ii மாநாட்டின் சாதகத்தன்மை குறித்து சந்தேகத்தினை ஏற்கனவே வெளியிட்டிருந்தார்.

Conquer the world with Global Qualifications!

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

Computing | Civil Engineering | Construction
Telecommunication Engineering | Biomedical Science
Law | Business Management | Software Engineering
Computer Networking

இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் முதற்தர நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள **BCAS campus** உடன் இணைந்து நாளைய உலகை நீங்களும் வெற்றி கொள்ளலாம்.

from Degree Foundations to Masters..

15 YEARS of Trust & Excellence in Higher Education

**International Collabortions**

edexcel — advancing learning, changing lives
UNIVERSITY OF WOLVERHAMPTON
LONDON SOUTH BANK UNIVERSITY

**Awards & Recognitions**

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector) - Survey by **LMD**

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

ISO 9001:2008 CERTIFIED

**Degree Foundations**
IEF - Engineering Foundation
ACCESS - IT Foundation with English
BMAC - Business Management Foundation

**BTEC HNDs**
Telecommunication Engineering | Quantity Surveying
Civil Engineering | Computing & Systems Development
Marketing | HR Management | Business Management
Hospitality Management | Biomedical Science | Law

**Top-Up Degrees**
BSc (Hons) in Quantity Surveying | LLB (Hons) in Law
BA (Hons) in Business Management
BSc (Hons) in Computing

**Masters Degrees**
MBA | LLM | MSc in IT

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Corporate Office** 32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. T : 011 255 9255
**Kandy Campus** 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731
**Batti Campus** 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451
**Wayamba Campus** 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339
**Jaffna Campus** 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910
**Qatar Centre** 36, Al-Ain St, Hilal, Doha-Qatar. T: +974 44366572

www.bcas.lk Hotline 011 255 9255

Colombo | Dehiwala | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Doha - Qatar

Building Careers - Transforming Lives



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org